# உதயன்

விலை ரூபா 20
பக்கங்கள் 28

சுடர் 31 | கதிர் 175 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 06, வியாழக்கிழமை 19.05.2016


**தமிழகத்தின் அடுத்த முதல்வர் யார்?**
இன்று வெளியாகிறது தேர்தல் முடிவு

34c - 27c
பரவலான இடி மழை









முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பதிவுகள்; மேலும் படங்கள் 8, 10, 11 ஆம் பக்கங்களில்

# சோகமயமானது முள்ளிவாய்க்கால்

## மக்கள் அணி திரண்டு உறவுகளுக்கு அஞ்சலித்தனர்

யாழ்ப்பாணம், மே 19

ஈழப் பெருந்துயரின் நினைவேந்தல் நிகழ்வு, முள்ளி வாய்க்கால் மண்ணில் நேற்று உணர் வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. தமது உறவுகளை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கதறியழுத தாய்மாரினால் முள்ளிவாய்க் கால் மண்ணே சோகமயமானது.

வடக்கு மாகாண சபையினால் ஏற்பாடு செய் யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு, முள்ளி வாய்க்கால் கிழக்கில் நேற்றுக் காலை இடம் பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் மூச்சடங்கிப் போன உறவுகளுக்காக பூத் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது அங்கு திரண்டிருந்த பக்.25

## போர் வெற்றியால் மகிழ்ந்தாலும் உயிரிழப்புகள் வேதனையானவை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 19



போர் வெற்றி ஒரு புறம் மகிழ்வாக இருந் தாலும், அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக் கள் வேதனையா னவை. நல்லிணக் கம் என்பது சிமெந்து - கல் - இரும்பு கொண்டு கட்டியெழுப்பப் படக் கூடியதல்ல. அது இரு இத யங்களின் இணைப்பில் - பக்.25

## உதயனுக்குள் அத்துமீறினர் பொலிஸ் புலனாய்வாளர்கள்

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒளிப்பதிவு செய்தமையால் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 19

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் நேற்றுக் காலை அத்துமீறிப் புகுந்து, அங்கு நடந்துகொண்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மற்றும் அதை யொட்டிய குருதிக்கொடை என்பவற்றைத் தமது கைபேசியில் பதிவு செய்தவர்கள், பணி யாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி னர்.

இந்த நிலையில் விசாரணை களின் பின்னர் அவர்கள் பக்.23

# மலையகத்தில் பேரவலம்

## 150 இற்கும் மேற்பட்டோர் மண்ணுக்குள் புதையுண்டனர்

கொழும்பு, மே 19

கேகாலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற மண்சரிவு இடர்களின் பின் னர், 150 இற்கும் மேற்பட்டோர் உயிரி ழந்தும், காணாமற்போயுமுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தினர் அறிவித்துள் ளனர்.

இதில் நேற்றுமுன்தினம் மாலை மாவனல்ல, அர நாயக்க பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் புதை யுண்டவர்களில் 21 பேரின் சடலங் களும், புலத் கோப்பிட்டிய களுப்பான தோட் டத்தில் இடம்பெற்ற மண்சரிவில் புதையுண்ட



வர்களில் 3 பேரின் சடலங்களும் நேற்று மாலை வரை மீட்கப்பட்டுள்ளன.

இந்த மண்சரிவின் போது பக்.26

## வித்தியா கொலை வழக்கில் மரபணு அறிக்கை கிடைத்தது

யாழ்ப்பாணம், மே 19

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன் புணர்வின் பின்னர் படுகொலை செய்யப் பட்ட வழக்கில் சந்தேக நபர்களின் மர பணுப் பரிசோதனை அறிக்கை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக் கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம். எம்.றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது வழக்கில் கைது செய்யப்பட் டிருந்த 12 சந்தேக நபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். பக்.25

## தமிழர் மனநிலையை அரசு புரிந்து நடந்தமை மகிழ்ச்சி

### கெடுபிடியின்றிய நினைவேந்தல் குறித்து வட மாகாண முதலமைச்சர் விக்கி கருத்து

முள்ளிவாய்க்கால், மே 19



முள்ளிவாய்க்கால் நினை வேந்தலைக் கடைப் பிடிப்பதற்குப் பலத்த கெடுபிடிகள் இல்லை. அரசு இந்த விடயத்திலா வது எமது மனநிலை யைப் புரிந்து நடப்பது மனதுக்கு இதமாக இருக் கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் பக்.23






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




பன்னாட்டு ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஞாபகங்களின் வலி ஒளிப் படப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நேற்று உதயன் பணிமனையில் நடைபெற்றது. முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட சுரேந்திரகுமார் மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சுரேஷ் ஆகியோருக்கான பரிசுகளை உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் வழங்கினார். மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட ச.தர்சனுக்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் பரிசு வழங்கினார்.

# சத்திர சிகிச்சையின்போது பெண் சாவு உறவினர்கள் முற்றுகைப் போராட்டம்

## மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சம்பவம்

மன்னார். மே 19

சத்திர சிகிச்சை செய்துகொள்வதற்காக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளம் குடும்பப்பெண் சத்திர சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். தலைமன்னார் ஸ்ரேசன் வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த தலைமன்னார் வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராகக் கடமையாற்றும் இரு பிள்ளைகளின் தாயான தமிழரசன் றோகிணி (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

அதையடுத்து ஆத்திரமடைந்த பொதுமக்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியுள்ளனர். வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயலாலேயே குறித்த குடும்பப் பெண் உயிரிழந்தார் என்றும் அதற்கு நியாயம் வழங்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஆயினும் சத்திர சிகிச்சைப் பிரிவினர் குறித்த பெண்ணின் உயிரைக் காப்பாற்ற எவ்வளவோ முயற்சி எடுத்தனர் என்றும் எனினும் அவரைக் காப்பாற்ற முடியாது போய்விட்டது என்று தெரிவித்த மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி - குறித்த பெண் உயிரிழந்தமைக்கு வைத்தியசாலையைக் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆயினும் இது குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையை நாடியுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த இளம் குடும்பப்பெண், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் பொது வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சை ஒன்றுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த பெண் சத்திர சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். அதையடுத்தே பொதுமக்கள் வைத்தியசாலையின் அசமந்தப் போக்காலேயே குறித்த பெண் உயிரிழந்தார் என்று வைத்தியசாலையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

குறித்த பெண்ணின் உயிரிழப்புத் தொடர்பாக அதிகாரிகள் முரண்பாடான பதில்களையே வழங்கினர் என்றும், சத்திர சிகிச்சைப் பிரிவுக்குள் நல்ல நிலையில் சேர்க்கப்பட்டவர் இரு மணி நேரத்துக்குள் எவ்வாறு உயிரிழந்தார் என்றும் குறித்த பெண்ணின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியதால் வைத்தியசாலையின் செயற்பாடுகள் சிறிது நேரம் தடைப்பட்டது. பின்னர் பொலிஸார் வரவழைக்கப்பட்டு போராட்டம் நடத்தியவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.



இது தொடர்பில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கேட்டபோது-

குறித்த பெண் பித்தப்பையில் கல் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டே சத்திர சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் வைத்தியசாலைக்குக் கிளினிக் வந்து செல்லும் நிலையில் நேற்றுமுன்தினம் அவர் சத்திரசிகிச்சைக்கு உள்வாங்கப்பட்டார். சத்திர சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார். இதற்கு சத்திர சிகிச்சைப் பிரிவினர் பொறுப்பல்ல. அவர்கள் நீண்ட நேரம் போராடியும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. மருத்துவத்தில் எந்தத் தவறும் இல்லை. மக்கள் வைத்தியர்களை குறை கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?. மக்களுக்காக சேவையாற்றும் வைத்தியர்கள் இவ்வாறு தவறு செய்ய மாட்டார்கள்.

குறித்த பெண்ணுக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்டவர் தெற்கில் இருந்து வந்துள்ள நிபுணத்துவர். அங்கிருந்து வந்து சேவையாற்றுவோரை மக்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டுவது ஏற்புடையதல்ல.

ஆயினும் மக்களின் குற்றச் சாட்டுக்களை அடுத்து குறித்த பெண்ணின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக மாத்தளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் செலவிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையை நாடியுள்ளோம். - என்றார். (ற-21,56)

# கடந்த மூன்று ஆண்டுகளில் ஆயிரத்து 610 பேர் கொலை!

## 6 ஆயிரம் வன்கொடுமைச் சம்பவங்கள்

கொழும்பு, மே 19

நாட்டில் கடந்த மூன்று வருடங்களில் ஆயிரத்து 610 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 6 ஆயிரத்து 216 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. -இவ்வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது.

இதன் போது, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட கொலைகள், கற்பழிப்புகள், திடீர் விபத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூட்டுஎதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில வினா எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

2013 ஆம் ஆண்டில் 586 பேரும், 2014 இல் 548 பேரும், 2015 இல் 476 பேரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், கடந்த மூன்றாண்டுகளில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 950 திடீர் விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 13 ஆயிரத்து 580 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-5)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரப் பணியாளர் போராட்டம்

## யாழ். மாநகர சபை முன்பாக தொடர்கிறது

யாழ்ப்பாணம், மே 19

யாழ். மாநகர சபையில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் சுகாதார ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையில் வேறு பணியாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டு அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டுகின்றனர். தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கடந்த 9 நாள்களாக யாழ். மாநகர சபைக்கு முன்பாக அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் மற்றும் பல தரப்புகளிடம் பல முறை கோரிக்கைகளை முன்வைத்தபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்தவொரு அரச அதிகாரியும் எமது பிரச்சனைகள் தொடர்பில் கண்டு கொள்ளவில்லை.

யாழ். மாநகர சபை ஆணையாளர் உட்பட ஏனைய அதிகாரிகளின் வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனாலும் இறுதியில் ஏமாற்றம்தான் பதிலாக கிடைத்திருக்கிறது.

நாங்கள் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடாவிடின் யாழ். நகரப் பகுதிகளில் மக்கள் நடமாட முடியாது. அது தெரிந்திருந்தும் அதிகாரிகள் எங்களைப் புறக்கணித்துள்ளனர். எமக்கான நிரந்தர நியமனத்தினை வழங்க மறுப்புத் தெரிவிக்கின்றனர். அதேநேரம் எமக்கான நியமனங்கள் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த நியமனங்களை மீளப் பெற்று எமக்குரிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

எமக்கான நியமனங்களை வழங்கத் தவறும் பட்சத்தில் சாகும் வரையான தொடர் போராட்டத்தை மேற்கொள்வோம். - என்று தெரிவித்தனர். (ற-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைபேசியில் பெண்ணுக்கு தொந்தரவு; கைதான மாணவன் பிணையில் விடுவிப்பு

பருத்தித்துறை,மே 19
அலைபேசியில் பெண் ஒருவரைத் தொந்தரவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 20 வயது மாணவன் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றினால் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அலைபேசியூடாக அழைப்பெடுத்து, தன்னுடன் மோசமான வார்த்தைகளால் உரையாடினார் என்றும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்றும் கிளிநொச்சியில் உள்ள அரச அலுவலகத்தில் பணியாற்றும் 31 வயதுப் பெண் அலுவலகர் ஒருவரினால், குறித்த மாணவன் மீது வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் விசாரணையை மேற்கொண்ட பொலிஸார், கடந்த 10 ஆம் திகதி இரவு மாணவனைக் கைது செய்தனர். இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போது மாணவனேயானாலும் அலைபேசியைத் தவறாகப் பயன்படுத்தினால், அது குற்றச் செயல்தான். சட்டம் எல்லோருக்கும் சமமானதே என்று தெரிவித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார், குறித்த மாணவனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டடார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மாணவன் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, இந்தக் குற்றச்சாட்டு வேண்டும் என்றே சோடிக்கப்பட்டது என்று மன்றில் சுட்டிக்காட்டினார்.முறைப்பாட்டைச் செய்த பெண்ணுக்கும் நெல்லியடியில் இயங்குகின்ற தனியார் வங்கியொன்றின் முகாமையாளராக இருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட ஒருவருக்கும் இடையிலான உறவே மேற்படி பிரச்சினைக்குக் காரணம்.

குறித்த முகாமையாளருக்கும் சட்டபூர்வமான மனைவிக்கும் கைது செய்யப்பட்ட மாணவனின் குடும்பத்தினருக்கும் நட்பு இருப்பதன் காரணமாக, இந்த வழக்கு வேண்டும் என்றே சோடிக்கப்பட்டது எனச் சட்டத்தரணி முன்வைத்தார்.

எனினும் மாணவனுடைய அலைபேசியிலிருந்து முறைப்பாட்டாளரின் அலைபேசிக்கு அழைப்புகள் எடுக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய நீதிவான், இத்தகைய பின்னணிச் சம்பவங்கள் முறையற்ற விதத்தில் நடப்பதை நியாயப்படுத்த முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் மாணவனின் கல்வி நடவடிக்கையைக் கருத்தில் கொண்டு, அவரை தலா 50 ஆயிரம் ரூபா இரு ஆள்பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், குறித்த மாணவன் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையையும் நீதிவான் தனது கட்டளையில் குறிப்பிட்டார். (த-வ-ரி)

## பெருந் திருவிழா

சாவகச்சேரி, மே 19
கைதடி ஏ-9 வீதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. திருவிழாக் காலத்தில் மு.ப. 10.30 மணிக்கு சிவஸ்ரீ சபாரத்தின ஈஸ்வர சர்மாவினால் "ஆன்மிக சிந்தனைகள்" எனும் தெய்வீகசொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## தேவை

அலுவலகப் பணியாளர்கள் (பெண்கள்)
கல்வித் தகைமை- **G.C.E.A/L,** ஆங்கிலம், கணினி அறிவு
தொடர்பு: R.S.ஞானப்பிரகாசம்
கட்டட ஒப்பந்த நிறுவனம். 32, றக்கா வீதி, யாழ்ப்பாணம். 077 355 1631

## NPK கணினி திருத்தம்

வடமாகாணத்தில் உள்ள வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
பொருத்து உபகரணங்களுக்கு 03 வருட உத்தரவாதம்.
**தொடர்பு: 0777 06 41 51**
(J/1426)(10.17)

## கணக்காய்வாளர்பரீட்சை

மேற்படி பரீட்சைக்கான வகுப்புக்கள் பிரபல ஆசிரியர்களால் வடமராட்சி மற்றும் வடபகுதி மாணவர்களின் நன்மைக்காக நெல்லியடி N.S.B வங்கியின் மேல்மாடியில் நடைபெறுகின்றது.
தொடர்பு:
**T.P: 077 8760 992**
(45)(10.17)

## வாகனங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஆங்கில தொடரிலக்க முள்ள 2கீப் டிப்பர் Isuzu, 1கீப் டிப்பர் Isuzu மற்றும் 36 Sri ராக்டர் (135 MF) ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு: 077 127 1692**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2767 திகதி 18.05.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 06 27 60 66 R
போனஸ் இல: 58
புதன்கிழமை ஜக்பொட்: ரூ.1,88,83,400/-
2016.05.25 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

## Galaxy Star

வெற்றி வாரம் 059 திகதி 18.05.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்: 03 03 06 12 33
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 43,66,120/=

## தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஒப்பந்த வேலைகள் மேற்கொண்டு வரும் எமது ஸ்தாபனத்துக்கு கீழ்க் காணும் தகுதியுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.
NCT சான்றிதழ் மற்றும் வேலை முன் அனுபவம் விரும்பத்தக்கது.
**தொடர்புகளுக்கு:- 077 886 6822**
WAYSNU Builders
Puliyankoodal South
Kayts, Jaffna.

## கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் ஏலவிற்பனை

**இடம் :** ஆலய அம்மன் வாசல்
**காலம் :** 22.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு
**விற்பனைக்குரிய பொருள்கள் :**
1) பாவித்த கதவுகள் (கோபுர வாசல் கதவு உட்பட)
2) பாவித்த தீராந்திகள்
3) பாவித்த பனை மரங்கள்

ஏலம் மூலம் பொருள்களை கொள்வனவு செய்பவர் உடன் பணத்தினை செலுத்தி பொருள்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

ந.ஜெயகாந்தன்
கௌரவ செயலாளர்.
0774080512
(J/1408)(10.17)

## காணி விற்பனைக்கு

கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபைக்கு சொந்தமான கைதடி பாலத்திற்கும் கைதடி கற்பக விநாயகர் ஆலயத்திற்கும் இடையில் A9 வீதிக்கு தெற்கு புறமாக அமைந்துள்ள வங்களாவத்தை எனும் காணி நிலபரப்பு 115 விற்பனைக்குண்டு.

ந. ஜெயகாந்தன்
கௌரவ செயலாளர், நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபை
**தொடர்பு: 077 4080512**

## கரன் வாகன சுத்திகரிப்பு நிலையம்

புகையிரதநிலைய வீதி, சாவகச்சேரி.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாகன சுத்திகரிப்பு நிலையம் தற்போது எம்மால் நடத்தப்பட்டு வருகின்றது.

வாடிக்கையாளருக்கான விசேட சலுகைகள்
01. முச்சக்கரவண்டிகள், மோட்டார்சைக்கிள்கள் மற்றும் சிறியரக வாகனங்களுக்கு எம்மிடம் தொடர்ந்து இரண்டு சேவிஸ்களை செய்வதன் மூலம் மூன்றாவது சேவிஸ் இலவசம்.
02. கனரக வாகனங்களுக்கு நான்காவது சேவிஸ் இலவசம்.

எம்மிடம் வாருங்கள் சலுகைகளைப் பெறுங்கள்.

நிர்வாகத்தினர்
கரன் வாகன சுத்திகரிப்பு நிலையம்
077 484 1306

## விழிசிட்டி சனசமூக நிலையம் கல்வித்தினத்தை ஒட்டி நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்

**தமிழ் மொழிமூலம்-க.பொ.த உ/த**

1ஆம் இடம் : வினுகா புஸ்பராசா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
2ஆம் இடம் : யோசப் அமிர்தம் மாிய அனிற்றா, நெடுந்தீவு ம.வி
3ஆம் இடம் : புவனேந்திரராசா விதுசா, யா/இந்து மகளிர் கல்லூரி

**க.பொ.த சா/த**

1ஆம் இடம் : செந்தில்குமரன் டிலக்சனா, மண்டைதீவு ம.வி
2ஆம் இடம் : இந்திரகுமார் அரன், யா/இந்துக் கல்லூரி
3ஆம் இடம் : ஜெகநாதன் சுபிகீர்த்தனன், மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை

**ஆங்கில மொழிமூலம்-க.பொ.த உ/த**

1ஆம் இடம் : அபர்ணா கருணாகரன், வேம்படி மகளிர் கல்லூரி
2ஆம் இடம் : கம்சாஹினி பிரேம்ராஜ், யா/இந்து மகளிர் கல்லூரி
3ஆம் இடம் : இடம் வழங்கப்படவில்லை

**க.பொ.த சா/த**

1ஆம் இடம் : நந்தாஜினி காந்தராசா, மானிப்பாய் மகளிர் கல்லூரி
2ஆம் இடம் : வைஷ்ணவி இராசலிங்கம், மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை
3ஆம் இடம் : அன்ரன் அருள்ராஜ் மேரி அபிஷா, நெடுந்தீவு ம.வி

பரிசளிப்பு 21.05.2016 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு தெல்லிப்பழை விழிசிட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

(J 1415)(1017) **செயலாளர்.**

## பிரமாண்டமான காட்சியறை

Mega Sale — மாபெரும் மலிவு விற்பனை

உங்கள் விருப்பம் போல் தெரிவுகளுக்கு..!

- பாலர் முதல் பல்கலைக்கழகம் வரையான அனைத்து வகை பாடநூல்களுக்கும் 10% முதல் 25% வரையான விலைக்கழிவு
- 1000 வகைக்கு மேற்பட்ட உலகை உலுக்கிய சரித்திர நாவல்கள், போர்கள், வரலாறுகள்....
- அனைத்துவகை சர்வதேச தரம்வாய்ந்த ஸ்ரேசனறி பொருள்களுக்கும் விசேட விலைக்கழிவு
- இந்திய நாவல்கள், திடுக்கிடும் சுவையான அதிரடி நாவல்கள் ...

உங்கள் அறிவுத் தேடல்களுக்கு எல்லையற்ற தேடல் நாம்

- மொத்தமாக கொள்வனவு செய்யும் பாடசாலைகள், நிறுவனங்கள், கடைகள் போன்றவற்றுக்கு இலவசமாக போக்குவரத்து வசதிகள். (நிபந்தனை உண்டு)
- பிளானல்போட், வைற்போட், ஓவர்கெட் புறொயெக்டர், ஸ்கிறீன் வகைகள் விசேட தள்ளுபடி விற்பனை.

இசைக் கருவிகள்

ஒருமுறை வந்து வித்தியாசத்தை உணருங்கள்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 5542 acdil@ymail.com
(C21029)(10017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணையை அரசு தட்டிக் கழிக்கவே முனைகின்றது

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

முள்ளிவாய்க்கால், மே 19

அரசு போர்க் குற்ற விசாரணையைத் தட்டிக் கழிக்கவே பார்க்கின்றது. பிழைகள் செய்தவரைத் தண்டிக்காது, தப்ப வைக்கவே அரசு தன்னைத் தயார்ப்படுத்தி வருகின்றது. இதற்கு எதிராக சகலரும் நீதிக்காகப் போராட முன்வர வேண்டும் - இவ்வாறு முள்ளிவாய்க்கால் மண்ணில்வைத்துஅறைகூவல் விடுத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் கிழக்கில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**என்ன செய்தோம்**

எந்தப் பாகுபாடின்றி உயிர்களைப் பறித்தெடுத்த 2009 ஆம் ஆண்டின் மே மாத இறுதிப் போர் சோக நிகழ்வுகளையே இன்று நினைவு கூருகின்றோம். ஆயர் இராயப்பு ஜோசப், சாட்சியத்துடன் 145 ஆயிரத்துக்கு மேல் எமது மக்கள் அந்தத் தருணத்தில் கொல்லப்பட்டனர் எனக் கூறியிருந்தார். இதுவரை யார் யார் கொல்லப்பட்டார்கள்?, அவர்கள் விவரங்கள் என்ன?, அவர்கள் எப்படி இறந்தார்கள்? என்ற எந்த விவரங்களையும் முறையாக அறிந்து கொள்ள உத்தியோக ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

சாட்சிகளில்லாப் போர் முடிந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. பாதிப்புற்ற மக்களின் மனச் சுமைகளை நீக்க இது வரை என்ன செய்துள்ளோம்?. அவர்களின் பாதிப்புக்களை இனங்காண என்ன செய்திருக்கின்றோம்?. தன்னம்பிக்கை இழந்து நடைப் பிணங்களாக வலம் வரும் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு எம்மால் இதுவரை செய்ததாகச் சொல்லும் அளவுக்கு எதுவுமிருக்கின்றதா என்றால் எம்மால் திடமாக ஐயமற்ற பதிலைக் கூறமுடியாமல் இருக்கின்றது.

போர்க் குற்றம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரேரணை கொண்டு வந்து 8 மாதங்கள் ஆகின்றன. போர்க் குற்ற விசாரணையை நடத்த எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை.

**போர்க் குற்ற விசாரணை வேறு நல்லிணக்கம் வேறு**

கொழும்பில் அண்மையில் நடந்த ஒரு நிகழ்வில் என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. 90 சதவீதம் சிங்கள சகோதரர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்தில் அவர்கள் அனைவரதும் கேள்வியாகவே அது அமைந்திருந்தது. தேசிய ந்ல்லிணக்கத்தின் பொருட்டு போர்க்குற்ற விசாரணையைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற பலரின் கருத்துக்கு உங்கள் பதில் என்ன? என்று கேட்டார்கள். இதனை எமது தமிழ் மக்களும் கேட்டிருக்கின்றனர் எனத் தெரிவித்தார்கள்.

நான் கூறினேன், போர்க்குற்ற விசாரணை வேறு, நல்லிணக்கம் வேறு. நடந்ததற்காகவே போர்க் குற்ற விசாரணை நடைபெறுகின்றது. இனி நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியதே நல்லிணக்க ஆராய்வு. இவற்றை வைத்துப் பண்டமாற்றுச் செய்வது போரில் உற்றார், உறவினர்களை இழந்த மக்களுக்குத் துரோகம் செய்வதாக அமையும். வேண்டுமென்றே செய்யப்பட்ட வெறித்தனமான செயல்களுக்குப் பச்சைக் கொடி காட்டினால் மீண்டும் அத்தகைய நடவடிக்கைகள் நடந்தேறும். எமது அரசு எம்மைக் காப்பாற்றும், நாம் நினைத்தவாறு எதனையும் செய்யலாம் என்ற மனோநிலை இராணுவத்தினரிடம் வந்துவிடும். அதனால் நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது. நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கூறினேன்.

**பண்டமாற்று இல்லை**

எப்படியாவது போர்க்குற்ற விசாரணையைத் தட்டிக் கழிக்கவே அரசு பார்க்கின்றது. சிங்கள மக்கள் பார்க்கின்றனர். ஏன் எம்முள் சிலரும் எண்ணுகின்றனர். பிழைகள் செய்தவரைத் தண்டிக்காது தப்ப வைக்கவே அரசு தன்னைத் தயார்படுத்தி வருகின்றது. இதற்கு எதிராக சகலரும் நீதிக்காகப் போராட முன்வரவேண்டும். நியாயமான சிங்களத் தலைமைகளும் அதில் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சர்வதேசம் இதில் மிகவும் இறுக்கத்துடன் இருக்க வேண்டும். ஆனால் அரசியல் காரணங்களுக்காக சில பல நாடுகள் கூட போர்க் குற்றங்களை மறந்து விடுங்கள், நாங்கள் சமஷ்டி எடுத்துத் தருகின்றோம் என்று கூற முன் வந்துள்ளன.

போரின் கடைசிக் கட்டத்தில் நடந்த குற்றங்களின் பாரதூரமான தன்மையை மனதுக்கு எடுக்காமல் இவர்கள் கதைக்கின்றார்கள். பாதிக்கப்பட்டுள்ளவர்களின் பாதிப்பையும் பரிதவிப்பையும் இவர்கள் அறிந்து கொண்டிருந்தார்கள் என்றால், இவ்வாறான பண்டமாற்று பற்றிப் பேச முன் வந்திருக்கமாட் டார்கள். இறந்த எம் மக்களின் ஆத்மாசாந்தி அடைய போர்க் குற்ற விசாரணை நடந்தே ஆக வேண்டும்.

**தாமதமின்றி தொடங்க வேண்டும்**

கலிங்கத்துப் போரின் பின்னர் போரில் இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும், கைம்பெண்களையும், கைவிடப்பட்ட குழந்தைகளையும் கண்டு மனம் வெதும்பினான் அசோகச் சக்கரவர்த்தி. அதனால்தான் புத்தரின் போதனைகளை நாடிச் சரணடைந்தான். எமது நாட்டின் தலைவர்கள் புத்த பெருமானின் பெயரால் நீதியை நிலைநாட்ட பாதிக்கப்பட்ட மக்களின் குறை தீர்க்க, இறந்த அப்பாவிகளின் ஆத்மாக்கள் சாந்தியடைய போர்க் குற்ற விசாரணையைத் தாமதமின்றி சர்வதேச உதவியுடன் நடத்த முன்வர வேண்டும்.

இன்றும் இங்கு நாம் சகலரும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இங்கு நடந்த போர்க் குற்றங்களுக்கு நீதி கேட்டு நிற்கின்றோம். நீதியை வழங்க எமது நல்லாட்சி அரசும் சர்வதேச அரசுகளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் முன்வர வேண்டும் - என்றார். (ற-5)

**பெயர்மாற்றம்**

தம்பாட்டி முத்துமாரி அம்மன் கோயிலடி
நாரந்தனையைச் சேர்ந்த
**குணேந்திரன் புவனேஸ்** ஆகிய நான்
எனது பெயரை இன்று முதல்
**குணேந்திரன் புவனேஸ்வரி** என
பெயர் மாற்றம் செய்வதோடு
இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும்
இவ்வாறே கையொப்பமிடுவேன்
என்பதை அறியத்தருகின்றேன்.

கு.புவனேஸ்வரி

**வேலையாள் தேவை**

கடைச்சல் வேலை (லேத்)
தெரிந்தவர்கள் உடன் தேவை.
தங்கி நின்று வேலை செய்யும்
வசதி உண்டு

076 603 9767

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனம் உணவு உற்பத்தி செய்யும் பிரசித்தி பெற்ற நிறுவனமாகும். அதி உயர் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். பிஸ்கட், சொக்லேட், கிளவுஸ், குளிர்பானம், லேபல் பொதியிடல் பிரிவுகளுக்கு OT -150 மாத சம்பளம் ரூபா. 45000இற்கு மேல் திறமையானவர்களுக்கு விசேட கொடுப்பனவு கொடுக்கப்படும். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். நாள்சம்பளம், கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். மொதத்துக்கு ஒருமுறை போனஸ் 25,000 ரூபா பெற்றுக் கொள்ளலாம். வயது 18-55.

076 915 5233, 077 891 0598

**பெயர் மாற்றம்**

நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறையில்
வசிக்கும் **பூலோகசிங்கம்** ஆகிய நான்
எனது பெயரை இன்று முதல் **பூலோகராசா**
என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால்
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து
சகல ஆவணங்களிலும் **பிரான்சிஸ்**
**பூலோகராசா** என கையொப்பம் இடுவேன்
என்பதை அறியத்தருகின்றேன்.

பிரான்சிஸ் பூலோகராசா

**சர்வதேச ஆய்வு அபிவிருத்தி மையம்**
**Institution of Professional Development for Teacher**

**"ஆய்வு முறையியல்" பாடநெறிக்கான விண்ணப்பமும்**
தனி, குழு, பங்குபற்றல் அணியாக சமூக விஞ்ஞான ஆய்வுச் செயற்திட்டங்களில் **பங்குபற்ற விரும்புபவர்கள்,**
**நிறுவனங்களுக்கான ஆய்வுச் செயலமர்வும் - 2016**

கல்வியியல்துறை விருத்தி, நிறுவன முகாமைத்துவ அபிவிருத்தி, சுய பொருளாதாரம், சமூக விடுதலையும் விழிப் புணர்வும், யுத்ததாக்க விளைவுகளும் தீர்வுகளும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வும், ஆங்கில மொழி அபிவிருத்தி, அரசியல் விடுதலைக்கான ஆலோசனை, வழிகாட்டல், ஊடகத்துறை அபிவிருத்தியும், சுதந்திரமும், தமிழர் தம் கலாசார பண்பாட்டு, சமய தத்துவம், விஞ்ஞானம் தகவல் தொழில் நுட்பம்.

- மேற்படி விடயங்களில் சர்வதேச பல்கலைக்கழகங்கள் தேசிய உள்ளுர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து துறைசார் ஆய்வுச் செயற்திட்டங்களை எமது நிறுவமூடாக மேற்கொள்ளவுள்ளோம்.
- இச் செயற்றிட்டங்களில் இணைய விரும்பும் நிறுவனங்கள் "ஆய்வு முறையியல்" பாடநெறியைப் பின்பற்ற விரும்புவோர் **தொலைபேசி மூலம் பதிவுகளை மேற்கொள்ளவும்**

கலாநிதி பா.தனபாலன் PhD (பணிப்பாளர்)
"சர்வதேச ஆய்வு அபிவிருத்தி மையம்,
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்.
தொ.பே. 077 068 1958

தலைமைச் செயலகம்
துவாரகை வீதி, கோண்டாவில்
வடக்கு, கோண்டாவில்.

# போதையில் சாரத்தியம் 12,000 ரூபா அபராதம்

சாவகச்சேரி, மே 19

நீதிமன்றில் சாரதி அனுமதிப்பத்திரம் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 12 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டதுடன், மேலும் ஒரு வருடத்துக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்தினார் என கொடிகாமம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்ட கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அபராதம் விதித்து சாரதிய அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது.

இதே நபர் மீண்டும் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு நேற்று நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் அந்த நபரை கடுமையாக எச்சரிக்கை செய்து 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாரதிய அனுமதிப் பத்திரத்தை மேலும் ஒரு வருடத்துக்கு தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார். கொடிகாமம் பகுதியில் ரயில் வருவதற்கான அபாய ஒலி எழுப்பப்பட்டு கடவையும் மூடப்பட்டிருந்த வேளையில் கடவையைக் கடந்து சென்ற வாகனச் சாரதி அந்தப் பகுதியில் கடமையிலிருந்த பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

இவரை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த சாரதியை எச்சரிக்கை செய்ததுடன் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுனிலிவர் பியூரிட் நீர் சுத்திகரிப்பு சாதனங்கள்**



**சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி!**

நீரிலுள்ள பக்டீரியா, வைரஸ், கல்சியம் மற்றும் நுண்ணுயிர்களை அகற்றுவது RO தொழில்நுட்பத்தால் மட்டுமே உவர் நீரையும் தூய்மையாக்கும் திறன் இதற்கு உண்டு. விசத்தன்மையுள்ள நீரையும் தூய்மையாக்கிப் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுத் தரும்.

*விசேட விலைக்கழிவில் இம்மாதம் 25 ஆம் திகதி மட்டும்.
*அரச ஊழியர்களுக்கு மட்டும் தவணைக் கட்டணங்களுக்கு வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**077 010 9562, 077 013 3514**

வடமாகாண விநியோகஸ்தர்

| Narayana Hard Ware Trader | House of Ceramic |
|---|---|
| Stanly Road, Jaffna. | K.K.S.Road, Jaffna. |
| 021 222 5390 | 021 222 9599 |



## பணிநிலை வேண்டுகை

கலை, பண்பாடு சார்ந்த செயற்றிட்டம் ஒன்றிற்காக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. தகுதியானவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வேண்டப்படும் அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1. நிதிமுகாமையாளர் | 01 வருட அனுபவம், உயர் கணக்கியல் டிப்ளோமா பட்டம் |
| 2. இணைப்பாளர் | 05 வருட அனுபவம், ஆங்கிலம் மற்றும் தமிழில் தொடர்பாடும், அறிக்கையிடும் திறன், பல்கலைகழகப் பட்டம் அல்லது அதற்கு நிகரான தகுதி |
| 3. களநிலை அலுவலர் | இரண்டு வருட அனுபவம், ஜி.சி.ஈ. உயர்தரத்தில் சித்தி |
| 4. ஆய்வாளர் | பல்கலைக்கழக பட்டம் மற்றும் சமூகவியல், பொருளியல் துறைகளில் சமூக ஆய்வை மேற்கொண்ட அனுபவம் |

சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரக் கோவையை எதிர் வரும் 22.05.2016 முன்பாக பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் ஆனுப்பி வைக்கவும்.

**செயல் திறன் அரங்க இயக்கம்**
Active Theatre Movement
203/5 Kachcheri Nallur Road, Panankulathady,Nallur, Jaffna
e.mail: jaffnatheatre@gmail.com, T.p: 0212216061

(C/21027)(1017)


## சட்டவிரோத மதுபான விற்பனை 51 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 19

ஒரு மாத காலத்துக்குள் சட்ட விரோதமான முறையில் வீட்டில் வைத்து மதுபானம் விற்பனை செய்த 51 பேர் 65 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தியுள்ளனர். சங்கானை மதுவரித் திணைக்களப் பிரிவில் கடந்த ஏப்ரல் மாதம் திணைக்கள அதிகாரிகளினால் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்து மதுபானம் விற்பனை செய்த 51 பேர் சிக்கினர்.

அவர்களுக்கெதிராக மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையைத் தொடர்ந்து அபராதம் விதிக்கப்பட்டது. (ற-115)


# சவால்களுக்கு மத்தியில் கடுமையான போர்

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவு, அமெரிக்காவில் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டமை, ஐரோப்பிய சந்தையின் வீழ்ச்சி, எரிபொருள் நெருக்கடி மற்றும் ISIS பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக மத்திய கிழக்கு பொருளாதார வீழ்ச்சி ஆகிய பல காரணங்களால் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றன. இதனை எதிர்கொள்வதற்கு குறுகிய கால அரசியல் இலாபத்தை நோக்கமாக கொள்ளாமல், நீண்டகால பொருளாதார வெற்றிகளை அடையும் நடைமுறைப்படுத்தக்கூடிய அறிவுப்பூர்வமான செயல்முறைகளை பின்பற்ற வேண்டும். அதனூடாக கடந்த ஆட்சி ஏற்படுத்திய கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவும், சாதகமற்ற சர்வதேச நிலைமையின் கீழ் அபிவிருத்தி சவாலை வெற்றிகொள்ளவும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

**இந்த பாரிய கடன் சுமை எமது பிள்ளைகளையும் எதிர்கால சந்ததியினரையும் சென்றடைய முன் தடுப்போம்.**

குறுகிய அரசியல் இலாபங்களை புறந்தள்ளிவிட்டு, நாட்டின் எதிர்கால நலன் கருதி கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைவோம்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முதல்வா
**செல்வி சாந்தினி மாணிக்கம்** அவர்களின்
அன்புத் தந்தை
**முத்தையா மாணிக்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர் மாவிட்டபுரம்)
அவர்கள் கடந்த 17.05.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை ஆசிரியர் நலன்புரிசங்கம்**
**யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்பபாடசாலை.**

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 19
சாவல்கட்டு 100 வீட்டுத்திட்ட பாலர் பாடசாலை விளையாட்டு விழா, இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலை முன்றிலில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர், இந்தியத் துணைத்தூதுவர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-115)

### பாம்பு தீண்டி குடும்பப் பெண் சிகிச்சையில்

சாவகச்சேரி, மே 19
தற்போது பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக குடியிருப்பை நோக்கி வந்த பாம்பு அங்கிருந்த குடும்பப் பெண்ணைத் தீண்டியது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவுவரணி நாவற்காட்டில் நடந்துள்ளது.
பாம்பினால் கடியுண்ட 55 வயது பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-9)

### சட்டவிரோத மணல் ஏற்றிய மூவருக்கு அபராதம்

சாவகச்சேரி, மே 19
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த இரு வாகனச் சாரதிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதமும், அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த போது பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியபோதிலும் நிறுத்தாமல் சென்ற வாகனச் சாரதிக்கு 33 ஆயிரம் ரூபாவும், நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அபராதமாக விதிக்கப்பட்டன.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான், மூன்று சாரதிகளுக்கும் அபராதம் விதித்தார். அத்துடன் மதுபோதையில் வாகனம் செலுத்திய மூன்று சாரதிகளுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் அபராதம் விதித்தார். (ற-9)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
25 . 08 . 1950

மறைவு
04 . 05 . 2016

**சூசைமுத்து ஜோசப் ஞானராசா**
(ஜீவா - Fashion Center உரிமையாளர்)

அண்ணா ! அண்ணா! ஜீவா அண்ணா!
அனைத்தும் தெரிந்த அன்பான அண்ணா!
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டாயே அண்ணா!
ஆண்டவனிடம் அமைதி அடையச் சென்றாயோ அண்ணா!
உன் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறோம் அண்ணா!

சிவராதா, நியூசிவராதா, நியூ லிற்றில் இந்தியன் ரெக்ஸ்,
உரிமையாளரும், ஊழியர்களும்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புச் சகோதரி
**திருமதி செல்லம்மா பாலசுப்பிரமணியம்**
கடந்த 15.05.2016 இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
திருமதி செல்வராணி செல்வரத்தினம்
(சகோதரி) (மைத்துனர்)
AV றோட், அரியாலை.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25 . 01 . 1925

இறப்பு
19 . 05 . 2006

அமரர் **கணபதிப்பிள்ளை மார்க்கண்டு யோசப்**


இறைவன் எமக்குத் தந்த விலைமதிப்பற்ற
சொத்தே எம் ஐயாவே
ஆண்டுகள் பத்து மறைந்து விட்டது, ஆனால்
மறையுமா ஐயா உங்களது இனிய முகம்
உலகில்தான் நீங்கள் மறைந்தீர்கள்
எங்கள் உள்ளங்களில் அல்ல
நாம் இவ்வுலகில் வாழும் வரை
உங்கள் நினைவுகளும் எம்முடன் வாழும்
உங்கள் ஆன்மா அமைதி பெற இறைவனை
வேண்டுகிறோம்

இல. 25A
மூளாய்லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**கந்தையா நடராசா (J.P)**
(இளைப்பாறியஅதிபர் - யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை)



தோற்றம்
04 . 05 . 1933

மறைவு
17 . 05 . 2016

யாழ்.அல்வாய் தென்னியன் வளவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தையும் கொக்குவில் கிழக்கையும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா கடந்த 17.05.2016 (செவ்வாய்க்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மீனாட்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் திருமதி செல்வராணி நடராசா(இளைப்பாறிய ஆசிரியை - யா/மல்லாகம் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் வாசுகி(கனடா), வசந்தாதேவி(கனடா), ஸ்ரீதரன்(ஆஸ்திரேலியா), தனபால் (கனடா), சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் பாலசுந்தரம்(கனடா), தயானந்தரூபி(சாந்தி - ஆஸ்திரேலியா), மாலினி(கனடா), Dr.பார்த்தீபன்(ஆதாரவைத்தியசாலை -தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பவித்திரா, கோகுல், ஆதரன், துவாரகா, ஸ்ரீஜெனனி, ஸ்ரீவாணி, கோபிராம், அனுராம், காருண்யா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.05.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.18, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்
Dr.ஆ.பார்த்தீபன்(மருமகன்)

021 221 2004

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
26.02.1947

ஆண்டவன் அடியில்
02.06.2012

அமரர் **விவேகானந்தன் கமலரேகா**
திதி: திரயோதசி (19.05.2016)

ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறவில்லை
எம் துயர் மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
அம்மா நீங்கள் மறைந்ததை
உணர்கின்றோம் - ஆனால்
நீங்கள் பிரிந்ததாய் உணர வில்லை
ஏழேழு ஜென்மமும் உங்கள் பாசமும்
எங்கள் நேசமும் தொடரும் தாயே....
அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளோடு
**பிள்ளைகள்**
அருந்தியார் வளவு,
அல்வாய் மேற்கு, திக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகக் கோருவது குறித்து நான் கவலையடையவில்லை

## வடக்கு ஆளுநர் கூரே தெரிவிப்பு

கொழும்பு, மே 19
வடக்குஆளுநர்பதவியிலிருந்து என்னை விலக்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் நான் கவலையடையவில்லை. அதனால் தளர்ந்து போகவுமில்லை. - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.

வடக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருந்து ரெஜினோல்ட் கூரேயை மீளப்பெறவேண்டும் என்று கோரி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் செயலாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சிறிகாந்தா, ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளமை குறித்துக் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஆளுநர் ரெஜினோல்ட்கூரே தெரிவித்ததாவது:-

என்னை விலக்குமாறு கோருவதானது, இனவாதிகளுக்குத் தீனி போடுவதாக அமைந்துவிடும் என்பது குறித்து நான் கவலையடைகின்றேன்.

மேலும் நான்கூறியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. எனவே என்மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளவர்களைச் சந்தித்து விளக்கமளிப்பதற்கும் நான் எதிர்பார்க்கின்றேன்.



தேசிய நல்லிணக்கத்தின் பெறுமதியை உணர்ந்தமையினாலேயே ஜனாதிபதி என்போன்ற ஒருவரை வடக்கு ஆளுநராக நியமித்துள்ளார்.

கொழும்பில் நான் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் என்னிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றுக்கு நான் பதிலளித்தேன். குறிப்பாக புலிகளை நினைவுகூர முடியாது என்றும், இறந்தவர்களை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உள்ளது என்றும் கூறினேன்.

அத்துடன் படுகொலை என்ற பெயரில் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் மாகாண சபையில் அவ்வாறு பிரேரணை நிறைவேற்றினாலும், அது சட்டமாகாது என்றும், நாடாளுமன்றமே இறுதித் தீர்மானம் எடுக்கும் இடம் என்றும் கூறினேன். ஆனால் ஊடகங்களில் தவறான புரிதலுடன் செய்திகள் வெளி வந்தன.

நான் எந்தவொரு இடத்திலும் இனவாதம் பேசவில்லை. நான் இனவாதியல்ல. ஒருபுறம் சரத் வீரசேகர என்னைப் பதவிவிலக்க வேண்டும் என்று கூறுகின்றார். மறுபுறம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா என்னைபதவிவிலக்கவேண்டும் என்று கூறுகின்றார். இது தொடர்பில் நான் ஆச்சரியமடைகின்றேன் - என்றார். (வ-5)

# மாணவன் துஷ்பிரயோகம் சந்தேகத்தில் ஐவர் கைது

## வல்வெட்டித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 19
பாடசாலை மாணவன் ஒருவனுக்கு மதுபானம் அருந்தக் கொடுத்து, பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் தனியார் கல்வி நிலைய நிர்வாகி உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர் வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரையில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. துஷ்பிரயோகம் செய்வது பற்றிய வீடியோ காணொலி இணையத்தளங்களில் வெளியாகியுள்ள நிலையில் குறித்த 5 பேரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தனியார் கல்வி நிலைய நிர்வாகி மற்றும் சமாதான நீதிவான் உள்ளிட்ட 5 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

குறித்த 5 பேர் கொண்ட குழு, பாடசாலையில் கல்விகற்கும் பதின்ம வயது மாணவனை தொண்டமானாறு உல்லாசக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, கட்டாயப்படுத்தி மதுபானம்குடிக்கவழங்கியதுடன், மாணவனை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் மூலமாக குறித்த மாணவனின் பெற்றோருக்குத் தெரியவந்துள்ளது. இதனையடுத்து மாணவனின் பெற்றோர்களால் வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையிலேயே குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மாணவனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினர். அதன்பின்னர் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் முற்படுத்தினர். இதன்போது 5 சந்தேகநபர்களையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,26,108)


# மரண அறிவித்தல்

## திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 162/3, பருத்தித் துறைவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம் 15.05.2016 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அலங்காரம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுந்தரலிங்கத்தின்(Mayoora Hotel - Colombo) அன்பு மனைவியும் சுகிர்தா, சுதர்சன்(Mayoora Gift Center), மயூரதி, தர்சினி, மதுசூதனன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் லோகேஸ் வரன் (Engineer,RDA), கிசோன்(Rathy Fashion Fair) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் யோகேஸ்வரன்(Sun Printers - Colombo), புவனேந்திரன் (கனடா), சுரேஸ்கரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மஞ்சுளாதேவி(இந்தியா), சுலோசனா(கொழும்பு), ரஞ்ஜனி(கனடா), அகிலா(கனடா), சோமசுந்தரம்(கனடா) காலஞ் சென்றவர்களான சிவபாதசுந்தரம், நாகலெட்சுமி மற்றும் கமலாம் பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீநீத், சாயிஷ் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.05.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரி யைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

162/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

021 222 6491 /
077 7724 7095

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவகம் ஒழுங்குபடுத்திய நிகழ்வு நேற்றையதினம் கிளிநொச்சி- கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் முதலில் பொதுச்சுடர் உறவுகளை இழந்தவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. அத்தோடு, உயிரிழந்தவர்களின் நினைவாக 'கண்ணீரின் காவியம்' என்னும் இறுவட்டு வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன், கிழக்கு மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான அரியரத்தினம், பசுபதிப்பிள்ளை மற்றும் மதத்தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-ரி3-21)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலையிலும் நேற்று எழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டது.
இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன், முன்னாள் நகரசபைத் தலைவர் க.செல்வராஜா, முன்னாள் பட்டணமும் சூழலும் பிரதேச சபைத் தலைவர் கே.விஜேந்திரன் எனப் பலர் கலந்து கொண்டனர்.(த-40)





முள்ளிவாய்க்காலில் வகை தொகையின்றி இன அழிப்பு செய்யப்பட்ட மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி, நேற்றுப் புதன்கிழமை காலை மன்னாரில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.
இதன்போது போரில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மலர் அஞ்சலி செலுத்துதல், தீபமேற்றுதல் மற்றும் அஞ்சலி உரைகள் என்பன இடம் பெற்றன.
நிகழ்வில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள்,உப தலைவர்கள்,உறுப்பினர்கள், போரில் உயிர் நீத்தவர்களின் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (த-56)



'மானுட பேரவலத்தின் நினைவேந்தலும் எழுச்சியும்' எனும் தொனிப் பொருளிலான முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நேற்று நண்பகல் 12. 25 மணியளவில் முல்லைத்தீவு- வெள்ள முள்ளிவாய்க்கால் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் இடம் பெற்றது.
நந்திக்கடலின் எழுச்சிப் பாடலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கான அகவணக்கம் மற்றும் பொதுச்சுடர் ஆகியன ஏற்றிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரஜைகள்குழுத்தலைவர் கோ. ராஜ்குமார், வவுனியா மாவட்ட பிரஜைகள்குழுவின் செயலாளர் தி.நவராஜ், ஊடகச்செயலாளர் அ.ஈழம் சேகுவரா மற்றும் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி கண்டறியும் குடும்பங்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (த-102)





முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் கொல்லப்பட்டவர்களின் 7 ஆவது வருடத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்திலும் நேற்று மு.ப.10 மணிக்கு மெழுகுவர்த்திகளை ஏற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.இதில் பல்கலைக்கழக சமூகத்தினர் பங்கேற்றனர் (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 நினைவேந்தலும் இரத்த தானமும்



















முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு உதயன் பத்திரிகை அலுவலகத்தில் நினைவு கூரலும் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.
உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன், நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவன் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றுவதையும் ,இரத்த தானத்தில் பங்குகொண்டவர்களில் சிலரையும் படங்களில் காணலாம். (வ-20)

## மக்கள் பிரதிநிதிகள் ஒருநாள் நனைவதால் பிரச்சினையில்லை

### சபாநயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, மே 19
மக்களுக்காகச் சேவையாற்றும் பிரதிநிதிகள் ஒரு நாள் மழையில் கொஞ்சம் நனைவதில் பிரச்சினையில்லை.- இவ்வாறு சபாநயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற இருந்தது. ஆனால் நாடாளுமன்றத்தைச் சூழவுள்ள பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. அதனால் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறுமா என்பது தொடர்பில், சபாநாயகரிடம் கொழும்பு ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படவுள்ளன. நாடாளுமன்ற அமர்வுகளுக்காக ஐந்து லட்சம் ரூபா செலவிடப்படுகின்றது. எனவே அமர்வுகளை நடத்தாவிட்டால் இந்த பணம் விரயமாகும். நாடாளுமன்ற அமர்வுகளை முன்னெடுக்க என்னாலான முழுமையான முயற்சிகளை மேற்கொள்வேன். மக்களுக்காகச் சேவையாற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஒரு நாள் கொஞ்சம் நனைவதில் பிரச்சினையில்லை. காலணிகளைக் கழற்றிவைத்துவிட்டேனும் நாடாளுமன்ற அமர்வுகளுக்கு வர முடியும்.
சில முக்கியமான சட்ட வரைவுகள் நிறைவேற்றிக் கொள்ளப்படவுள்ளன. காலநிலை மேலும் மோசமடைந்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்குள் பிரவேசிக்க வேறு வழிகளில் நடவடிக்கை எடுக்கப்படும் .- என்றார்.
இதேவேளை நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுமுன்தினம் எந்தத் தடையுமின்றி இடம்பெற்றன.
(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழப் பெருந்துயரின் நினைவேந்தல் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.



ஈழப் பெருந்துயரின் நினைவுச் சுடர்



நிகழ்வின் ஆரம்பத்தில் மௌன அஞ்சலி



நிகழ்வின் ஆரம்பத்தில் மௌன அஞ்சலி



முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முதன்மைச் சுடர் ஏற்றுகின்றார்.



தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா அஞ்சலி செலுத்துகிறார்.



ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அஞ்சலி செலுத்துகிறார்.



புளொட் இயக்கத் தலைவர் த.சித்தார்த்தன் அஞ்சலி செலுத்துகிறார்.



நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா அஞ்சலி செலுத்துகிறார்.



நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அஞ்சலி செலுத்துகிறார்.



நாடாளுமன்ற உறுப்பினர் த.சிவமோகன் அஞ்சலி செலுத்துகிறார்.



நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அஞ்சலி செலுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அஞ்சலி செலுத்துகிறார்.


நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அஞ்சலி செலுத்துகிறார்.


வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அஞ்சலி செலுத்துகிறார்.


வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகன்நாதன் அஞ்சலி செலுத்துகிறார்.


வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசா அஞ்சலி செலுத்துகிறார்.


வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அஞ்சலி செலுத்துகிறார்.


வடக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அஞ்சலி செலுத்துகிறார்.


வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனிஸ்வரன் அஞ்சலி செலுத்துகிறார்.


மண்ணில் புதைக்கப்பட்டவர்களுக்கு மலரஞ்சலி


நினைவேந்தலில் உரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இனங்கள் இணைந்து வாழ கூட்டுப் பொறுப்பு அவசியம்

தமிழ் மக்களை பிரிவினைவாதிகளாகக் கருதி ஓரம் கட்டுவதை நாம் முற்றாகக் கைவிட வேண்டும். எமது சகோதர இனத்தைக் கொன்று விட்டு, நாம் வெற்றி விழாக் கொண்டாடக் கூடாது --

விடுதலைப்புலிகள் என்றாலும் அவர்களும் இலங்கையர்களே. அதை மறந்துவிடக் கூடாது--

சிங்களவரின் போர் வெற்றி விழா எனக் கூறிக் கொண்டு மீண்டும் தமிழ் மக்களை பிரிவினைவாதிகளாக ஆக்காதீர்கள். அப்படிக் கூறிக் கொண்டு அவர்களை மீண்டும் ஓரம் கட்டாதீர்கள்.

மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டவர் எந்த ஒரு தமிழ் மகனும் அல்லர். பாதுகாப்புச் செயலாளர் என்ற உயர்ந்த பதவியை வகிக்கும் கருணாசேன கெட்டியாராட்சி என்ற பெரும்பான்மை இனத்தவரான பெருமகனே அவர் ஆவார்.

போரில் உயிர் இழந்த மக்கள்,எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்க்ளின் இழப்புக்காக, உறவுகள் நினைவு கூர உரிமை உண்டு. அதனை அவர்கள் தாம் விரும்பிய இடங்களில் நினைவு கூரலாம் என்று ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது விளக்கமாகவும் விசாலமாகவும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

எங்கள் நாடு இனவாதம், இடர் போன்ற அனைத்து வகைச் சிக்கல்களுக்கும் முகங்கொடுத்த தேசம். எனினும் போர் ஒன்று மட்டுமே நாட்டுக்கு மிகப்பெரும் இழப்புக்களை உண்டாக்கியது.

கடந்த காலங்களில் போர் வெற்றி நாள்கள், இராணுவ வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டை உயிர் நீத்த இராணுவ வீரர்கள் மற்றும் போரின்போது உயிரிழந்த பொதுமக்களின் நினைவேந்தியும் கடைப்பிடிக்கப்பட்டது.

குறிப்பாக, வடக்கில் போரில் உயிரிழந்த மக்கள் எவராக இருப்பினும், அவர்களது உறவுகள் அவர்களை நினைவு கூர உரிமை உண்டு. மேலும்--

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நாளை வெற்றி நாளாக (அரசு) கொண்டாட வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அவ்வாறு கொண்டாட நாம் தயாரில்லை. இங்கு இடம்பெற்ற மோதல்களோ, போரோ, இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறவில்லை. இங்கு வாழும் இரண்டு இனங்களுக்கு இடையிலேயே நடைபெற்றுள்ளது.

வடக்கில் இன்று மக்கள் மத்தியில் நல்ல ஜனநாயக மாற்றம், நற்பண்பு உண்டாகியுள்ளன. அதேபோன்று சிங்கள மக்கள் மத்தியிலும் அவை முகிழ்த்துள்ளன.

அதேவேளை, சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளும் பண்பு உயர்ந்து வளர்ந்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், தமிழ் மக்களை இனவாதிகளாக மாற்றி அவர்களை ஓரம்கட்டக் கூடாது. அது இப்போதைய புதிய பண்பாக உயரட்டும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார்.

மொத்தத்தில் --

இரண்டு இனங்களும் இணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்ட வேண்டும். நீதியும், நியாயமும் உள்ள நாடாக எமது தேசம் உருவாக்கப்படுவதே முதற் தேவை. அது இரண்டு இனங்களையும் சேர்ந்தவர்களது கூட்டுக் கடமையும் மிகப்பெரிய பொறுப்பும் ஆகும். அதனை இன்றே செய்வீர், மிக்கவும் நன்றே செய்வீர்...!

# தீர்வு தொடர்பான தெளிவை கூட்டமைப்பு வழங்க வேண்டும்

எம்.ஐ.முபாறக்



மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்ததும், தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை தமிழருக்கு ஏற்படத் தொடங்கியது. மகிந்தவின் ஆட்சியிலும் அதற்கு முன்பும் தமிழர்கள் நடத்தி வந்த அரசியல் தீர்வொன்றை நோக்கிய போராட்டம் மைத்திரி - ரணில் ஆட்சியில்தான் வெற்றி பெரும் எனத் தமிழர்கள் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினர்.

அரசியல் தீர்வைப் பெறும் அவர்களின்போராட்டத்துக்குப் பல விடயங்கள் தடைகளாக அமைந்தன. அந்தத் தடைகளுள் முதலிடத்தில் இருப்பது பேரினவாதம்தான். இந்தப் பேரினவாதச் சிந்தனை காலத்துக்குக் காலம் கிளப்பப்பட்டு, இந்த ஆட்சியிலும் நீடிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வை தேசப்பற்றுக்கு எதிரான - நாட்டின் ஐக்கியத்துக்கு எதிரான -பெரும்பான்மை இன மக்களின் இருப்புக்கு எதிரான ஓர் ஆயுதமாகக் காட்டி, பேரினவாத அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் இருப்பை பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் உறுதி செய்து கொண்டு வந்ததன் விளைவாகவே, அரசியல் தீர்வு முயற்சி இன்றும் பூரணமாக்கப்பட்டாமல் இருக்கின்றது.

புலிகளை அழித்து போரை வென்ற மகிந்த, தமிழருக்காக ஒரு பொருத்தமான அரசியல் தீர்வை முன்வைப்பார் என ஆரம்பத்தில் எல்லோரும் எதிர்பார்த்தனர். தமிழர்களுக்காக மகிந்த எந்தவொரு நல்ல காரியத்தைச் செய்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனோநிலையில் சிங்கள மக்கள் இருந்த அந்த யுகத்தை, - அரிய சந்தர்ப்பத்தை, மகிந்த வேண்டுமென்றே நழுவவிட்டார்.

போரை வென்றதன் மூலம் மகிந்த தம்மை எப்படி ஒரு தேசப்பற்றாளராகக் காட்டிக் கொண்டாரோ அதேபோல், அரசியல் தீர்வை மறைமுகமாக நிராகரித்து, அவ்வாறே தன்னைக் காட்டுவதற்கு அவர் முயற்சி செய்தார்.

### அரசியல்தீர்வைவழங்காத மகிந்த

போர் முடிந்து ஆறு வருடங்கள் ஆட்சியில் இருந்த மகிந்த வெறும் ஒரு வருடத்துக்குள்ளேயே அரசியல் தீர்வை வழங்கி இருக்கமுடியும். அவ்வாறு வழங்காமல் இருந்தமைக்குக் காரணம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொடர்ந்தும் அவரைத் தேசப்பற்றாளராகக் காட்டுவதும், அவரது அடிமனதில் தமிழருக்கு எதிராகப் பொதிந்து கிடந்த இனவாதமும்தான் என்பதில் மாற்றுக் கருத்தெதுவும் கிடையாது.

சர்வதேச நெருக்குதல்கள் காரணமாக, அரசியல் தீர்வு விடயத்தில் அவர் போலியான - காலத்தை வெறுமனே இழுத்தடிக்கும் சில நகர்வுகளை மேற்கொண்டார். அவற்றுள் ஒன்றுதான் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவை அமைத்தமை.

திஸ்ஸ விதாரண தலைமையில் இந்தக் குழு வருடக்கணக்கில் கூடி ஆராய்ந்துத் தயாரித்த அரசியல் தீர்வு யோசனையை ஒரே நாளில் தூக்கி வீசினார் மகிந்த. அந்த முயற்சியில் அதிக காலம் ஓடிவிட்டது. அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்தார். அதுவும் செல்லாக் காசானது.

-இவ்வாறு குழுக்கள் அமைத்தே மகிந்த காலத்தைக் கடத்தினார். தமிழர்களுக்கு எதைக் கொடுத்தாலும் சிங்களவர்கள் அதை எதிர்க்கமாட்டார்கள் என்ற ஒரு நிலை இருந்த போதே, இவ்வாறு குழுக்களை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து காலத்தைக் கடத்தினார் என்றால் – அது திட்டமிட்ட புறக்கணிப்புதான் என்பதை மறுக்க முடியாது.

மகிந்தவின் தீர்வு முயற்சி இவ்வாறே பயணித்து எந்தவித பயனையும் எட்டாது முடிந்தது. அவரது ஆட்சியும் கவிழ்ந்தது. இப்போது புதிய அரசு வேறொரு வடிவில் இந்த முயற்சியை முடுக்கிவிட்டுள்ளது. இது மகிந்தவின் தீர்வு முயற்சியில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது. புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வந்து அதன் ஊடாக அரசியல் தீர்வை வழங்குவதற்கு இந்த அரசு விரும்புகின்றது.

தீர்வு முயற்சிக்குக் காலாகாலமாக இருந்து வரும் பேரினவாதம் என்ற முட்டுக்கட்டை இந்த அரசின் முயற்சிக்கும் இருக்கத்தான் செய்கின்றது.

அரசியல் தீர்வு தொடர்பான பயணத்தில் அரசு இறங்கத் தொடங்கியதுமே மகிந்த அணி உள்ளிட்ட பேரினவாத தரப்பினர் இதற்கு எதிர்ப்பை முன்வைக்கத் தொடங்கினர். இந்தத் தீர்வு முயற்சிக்குத் 'தமிழீழ உருவாக்கம்' என்றொரு பெயரையும் அவர்கள் இட்டுள்ளனர்.

### சமஷ்டித் தீர்மானம்

வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு முன்மொழிவைத் தொடர்ந்து பேரினவாதிகளின் பரப்புரை வீரியமடையத் தொடங்கியது. தமிழீழத்தை உருவாக்குவதற்குத் தமிழர்கள் முயற்சி செய்கிறார்கள் என்ற பேரினவாதப் பரப்புரை அடிமட்டம் வரை சென்றடையத் தொடங்கியுள்ளது.

இந்தப் பரப்புரை மிகவும் ஆபத்தானது என்பதை உணர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதை நிராகரிக்கத் தொடங்கியது. வட்டுக்கோட்டை பிரகடனத்தின்படி உருவான தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, அதிகபட்ச அதிகாரப் பகிர்வையே நாம் கோருகின்றோம் என்று அவர்கள் கூறத் தொடங்கினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிராகரிப்பு எல்லாத் தரப்புக்கும் சென்றடையும் வகையில், அவர்கள் பல முக்கிய நிகழ்வுகளின் ஊடாக அதை வெளிப்படுத்துகின்றனர். அதில் முக்கியமாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியாவில் வைத்து அந்த அறிவிப்பை விடுத்திருப்பது மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.



**" புலிகளை அழித்து போரை வென்ற மகிந்த, தமிழருக்காக ஒரு பொருத்தமான அரசியல் தீர்வை முன்வைப்பார் என ஆரம்பத்தில் எல்லோரும் எதிர்பார்த்தனர். தமிழர்களுக்காக மகிந்த எந்தவொரு நல்ல காரியத்தைச் செய்தாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனோ நிலையில் சிங்கள மக்கள் இருந்த அந்த யுகத்தை – அரிய சந்தர்ப்பத்தை மகிந்த வேண்டுமென்றே நழுவவிட்டார். "**

கூட்டமைப்பு தீர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டை கூட்டமைப்பு ஒட்டுமொத்த சர்வதேசத்துக்கும் மீண்டும் ஒரு தடவை முன்வைத்துள்ளது என்று சொல்லலாம்.

அதுமாத்திரமன்றி, தமிழீழத்தைத் தாம் கோரமாட்டோம் என்று அவர்கள் சர்வதேசத்துக்கு வழங்கியுள்ள வாக்குறுதியாகவும் அதை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

### இந்தியாவை நம்பும் கூட்டமைப்பு

அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டமைப்பு சர்வதேசத்தின் உதவியை விரும்புகின்ற போதிலும், அது அதிகம் விரும்புவது இந்தியாவின் உதவியைத்தான். இந்தியா– இலங்கையின் மிகப் பெரிய அயல் நாடு என்பதால் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பானது காத்திரமானதாக அமையும் என கூட்டமைப்பு நம்புகின்றது.

இதன் காரணமாகத்தான் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. 2014 இல் இந்தியாவின் ஆட்சியைக் கைப்பற்றியதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக மோடியைச் சந்தித்து தீர்வு விடயத்தில் மகிந்த அரசுக்குப் போதுமான அழுத்தத்தைக் கொடுக்குமாறு மோடியிடம் கேட்டுக்கொண்டது. இந்த விவகாரத்தில் கூட்டமைப்பின் பின்னால் நிற்பதாக மோடியும் உறுதியளித்தார்.

இந்தநிலையில், இலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கும் தீர்வு தொடர்பான குழப்ப நிலையை இந்தியாவில் வைத்து தெளிவுபடுத்தி தாம் எதைக் கேட்கின்றோம் என்பதை சம்பந்தன் வரையறுத்துக்கூறி இருப்பதானது பேரினவாதிகளின் வாய்களுக்குப் பூட்டுப் போடுவதாகவும், தீர்வு விடயத்தில் இந்தியாவின் உதவியைக் கோருவதாகவும் அமைந்துள்ளது.

இருந்தாலும், இந்த விடயம் தொடர்பில் சிங்கள மக்கள் மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதற்கான ஒரு பரப்புரைத் தளத்தை கூட்டமைப்பு மிகவிரைவில் அமைக்க வேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பமாகும்.

# பொதுப்பணி என்றால் என்ன?

உலகத்திலேயே மிக உயர்ந்த கலாசாரப் பண்பாட்டைக் கொண்டது எங்கள் தமிழினம். அதிலும் இலங்கையின் யாழ்ப்பாணத் தமிழர் என்றால் அவர்களின் பேச்சு, நடை உடை என்பவை வேற்றினத்தவர்களாலும் வியந்து பார்க்கும் அளவுக்கு உயர்ந்து காணப்பட்டன.

அந்தக் காலம் இனிவருமா? என்ற ஏக்கம் இப்போது தூக்கத்திலிருந்து துரத்துவதைச் சொல்லி ஆற உதயனின் இந்தத் திருமுகமும் போதாது.

வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிகரம் தொட்டிருக்கும் கலாசாரச் சோதனைக்கு விடைகாண எந்த அமைப்புக்களும் நேர்மையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

மாறாக அரசியல், சமய, குடும்ப முன்னேற்றத்துக்காகவே தினம் தோறும் புதிய புதிய திட்டங்கள் இலாப நோக்கோடு நடைபெறுவதைக் காண முடிகின்றது.

மில்லிக்கிராமில் அகப்பட்ட கஞ்சா கிலோக்கிராமிலும் வீதியிலே பறி கொடுத்த தங்க நகைகளைச் சொந்த வீட்டிலேயே பறி கொடுக்கும் நிலையிலும் வாழும் எம் இனத்தைக் காப்பாற்ற, சமயங்களினாலும் அரசியலினாலும் முடியவில்லையாயின், இவையாவும் இறந்தவர்களுக்கு பலகாரம் படைப்பதற்கும் அவர்களது புகழ்பாட மேடை அமைப்பதற்குமா? என்ற ஏக்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கே புரியும்.

பல கொடூரங்களுக்கு அடித்தளமாய் இருக் கும் கஞ்சா எனப்படும் போதை எம் மண்ணைத் தொடும் முன்பே கடலில் வைத்து அழித்து விடுங்கள். காரணமானவர்களைக் கைது செய்யுங்கள்.

கூரிய ஆயுதங்கள் தயாரிக்கும் நிறுவனங்களை தடைசெய்யுங்கள் என தன் பணிக்கு அப்பால் மனம் உருகும் கட்டளைகளைப் பிறப்பித்த அந்தக் கௌரவ மனிதரை வாழ்த்தவோ அவரது கட்டளைப்படி விசேட செயற்றிட்டங்களை முன்னெடுக்கவோ எந்தவொரு பொது அமைப்புக்களும் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை.

பன்முகப்படுத்தலின் கீழ் எவராவது உதவி புரிந்தாலும் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி வாழ்த்தி வரவேற்கும் இந்த அமைப்புக்கள் கௌரவ நீதிவானின் கருத்துக்கும், அவர் சிந்தனைக்கும் பாராட்டுத் தெரிவித்தார்களா? மாறாக அதிரடிப்படையை களத்தில் இறக்குங்கள் என அவர் வேண்டுகோள் விடுக்கும்போது அது தவறானது பதட்ட நிலையை உரு வாக்கும் எனக் குற்றம் காண்பது நியா யமா?

மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எமது இனத்துக்குக் கிடைத்த அரிய பெருமனிதர்.

இவர் சிந்தனைக்கேற்றாற்போல் சகல பொதுஅமைப்புக்களும் செயற்படுமாக இருந்தால், குற்றச் செயல்களின் தாக்கத்தில் இருந்து சகலரும் விடுபட முடியும். பொதுப்பணி என்றால் என்ன என்பது அப்போதே புரியும். அரசியல், சமய, சமூக அமைப்புக்கள் இதைக் கவனத்தில் கொள்வது காலத்தின் தேவையாகும்.

– சர்ந்தையூர் வினிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈராக்கில் ஐ.எ
# குண்டு வெடிப்
## நூற்றுக்கணக்காே

பக்தாத், மே 19
ஈராக்கில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் அடுத்தடுத்து 3 இடங்களில் ஐ.எஸ். தீவிர வாதிகள் நிகழ்த்திய குண்டுவெடிப்புச் சம்ப வத்தில் 69 பேர் உயிரிழந்தனர். நூற்றுக் கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.
பாக்தாத்தின் வடகிழக்குப் பகுதியில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் சாப் என்ற இடத்தில் ஐ.எஸ் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் குண்டுவெடிப்புக்களை அரங்கேற்றினர். முதலில் மக்கள் நட மாட்டம் மிகுந்த சந்தைப் பகுதியில் குண்டு வெடித்தது.

இதனால் பொ
அங்குமிங்கும்
தீவிரவாதி ஒரு
டியிருந்த குண்
இதில் 34 பேர்
சிதறி உயிரிழ
டோர் படுகாயம
இந்தத் தாக்கு
தின் தெற்கு பகு
இடத்தில் ஷியா
அங்குள்ள கா
வெடிகுண்டை
வெடிக்கச் செய்

# சிங்கப்பூரில் சிகா வைரஸ் பாதிப்பு

சிங்கப்பூர் சிற்றி, மே 19
சிங்கப்பூரில் சிகா வைரஸ் பாதிப்பு கண்ட றியப்பட்டுள்ளது. இதனால் ஆசிய நாடு களில் சிகா வைரஸ் அச்சுறுத்தல் அதி கரித்துள்ளது.
பிரேஸிலில் இருந்து சிங்கப்பூர் திரும்பிய பயணி ஒருவருக்குச் சிகா வைரஸ் அறி குறிகள் இருப்பது கண்டறியப்பட்டு அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.
இந்தநிலையில் அவருக்கு அந்த வைரஸ் பாதிப்பு இருப்பது அண்மையில் உறுதி செய்யப்பட்டது.
இதனால் சிங்கப்பூர் முழுவதும் சுகாதார நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன. அங்கு சிகா வைரஸை பரப்பும் ஏடிஸ் கொசுக்களை அழிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. அண்டை நாடான மலேசியாவிலும் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
(த)




# சென்னையில் 
## பேரிடர் மீட்புக்



சென்னை, மே 19
சென்னையில் தொடரும் கனமழை யின் எதிரொலியாக,தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும், மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் 6 குழுவினரும் வரவழைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளனர். தேசிய பேரிடர் மீட்புக் குழுவின் 10 படகுகளும், மீன்வளத் துறையின் 12 படகுகளுமாக மொத் தம் 22 படகுகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.
மழையின் பாதிப்புக் காரணமாகச் சென்னையில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து மாந கராட்சி ஆணையர் பி.சந்திரமோகன் தெரிவிக்கையில் :-
சென்னை மாநகரில் கடந்த 24 மணி நேரத்தில் 12 முதல் 14 செ.மீ. மழை பெய்துள்ளது. அனைத்துச் சுரங்கப் பாதைகளிலும் நீர்தேங்காமல் இருக்க நீர் உறுஞ்சும் மோட்டார் பம்பு கள் தயார்நிலையில் வைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகி
எந்தச் சுரங்கப்பாதையிலும் தண்ணீர் தேங்கவி
இதுவரை 44 மரங்கள் விழுந்துள்ளன. அவற்றை உ
குடன் அகற்றும் பணியில் மாநகராட்சிப் பணியா
ஈடுபட்டுள்ளனர்.
கனமழை பெய்யும் நிலை ஏற்பட்டால் தாழ்வான பகு
உள்ளவர்களைத் தங்கவைக்க 17 நிவாரண முகா
அனைத்து வசதிகளுடன் தயார்நிலையில் உள்
அவர்களுக்கு உணவு தயாரிக்க அம்மா உணவகங்
மாநகராட்சிப் பணியாளர்கள் தயார்நிலையில் உள்
மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் அ
சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள்
நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

# தென்கொரிய எழுத்த



சியோல், மே 19
தென்கொரிய எழுத்தாளர் ஹான் காங் எழுதிய 'தி வெஜிட்டே ரியன்' நாவல் நடப்பாண் டுக்கான மேன் புக்கர் பரிசை வென்றுள்ளது.
சர்வதேச அளவில் இலக்கியத்துக்கு வழங்கப் படும் மிக உயரிய விருது மேன் புக்கர் விருதா கும், இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.
2016 ஆம் ஆண்டுக்கான மேன் புக்கர் பரிசு தி வெஜிட்டேரியன் நாவலுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. இந்தநாவல் பெண்கள் மனித குரூ ரத்தைப் புறக் கணிப்பதும், இறைச்சி உண்
விட்டுவிடுவதும் பற்றி விவரிக்கிறது.
மேன் புக்கர் பரிசுக்கான போட்டியில், நோபல் பரிசு பெ
ஹான் பமுக், எலீனா பெரான்டே உள்ளிட்டோரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ் வெறியாட்டம் ப்பில் 69 பேர் சாவு

## னோர் படுகாயம்

பொதுமக்கள் அலறியடித்து ங்கும் ஓடிய சமயத்தில், ஐ.எஸ். தி ஒருவன் தனது உடலில் கட் குண்டை வெடிக்கச் செய்தான். பேர் சம்பவ இடத்திலேயே உடல் யிரிழந்தனர். 68க்கும் மேற்பட் காயமடைந்தனர்.

தாக்குதலை தொடர்ந்து பக்தாத் கு பகுதியில் உள்ள டோரா என்ற ஷியா பிரிவினரைக் குறிவைத்து ள காய்கறி சந்தைக்குள் கார் ண்டை ஐ.எஸ். தீவிரவாதிகள் செய்தனர். இதில் 12 பேர் உயிரி ழந்தனர். 22 க்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள சதர் நகரத்தின் மீதும் ஐ.எஸ் தீவிரவாதிகள் நேற்றுத் தாக்குதல் நடத்தி னர். அங்குள்ள சந்தைப் பகுதியில் குண் டுகள் வெடித்ததில், 23 பேர் உயிரிழந்தனர். ஆபத்தான நிலையில் 35 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். ஒரே நாளில் மூன்று இடங்களில் அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவங்களால் ஈராக் முழுவதும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

(தி)

# சவூதி அரேபியாவுக்கு எதிராக அமெ. செனட்டில் சட்டவரைவு

நியூயோர்க், மே 19

நியூயோர்க் மற்றும் வொஷிங் டனில், கடந்த 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்களால் பாதிக் கப்பட்டவர்கள், சவூதி அரேபியா மீது வழக்கு தொடுக்க வழிசெய்யும் சட்டவரைவு அமெரிக்க செனட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தத் தாக்குதல் களில் உயிரிழந்தவர்களின் குடும் பங்கள் சவூதி அரேபிய அரசு மீது வழக்குத் தொடுக்க முடியும்.

எனினும் இந்த சட்டவரைவு குறித்து ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஆழ்ந்த கவலைகள் உள்ளன என்றும்–அவர் அதில் கையெழுத் திட்டு சட்டமாக்குவார் என்பதை கற் பனை செய்துக்கூடப் பார்ப்பது கடினமாகவுள்ளது என்றும் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை ஆதரித்தவர் களுக்கு எதிராக நீதிகோர வழிசெய் யும் சட்டவரைவு அமெரிக்க செனட் டில் குரல் வாக்கெடுப்பு நிறை வேறியது.

அப்படியான சட்டம் கொண்டு வரப் பட்டால், அமெரிக்கப் பொருளா தாரத்திலிருந்து பில்லியன் கணக் கான டொலர்களை தாங்கள் திரும்பப்பெற வேண்டிய சூழல் ஏற் படும் என சவூதி அரேபியா ஏற்க னவே எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்தச் சட்டவரைவை சட்டமாக் குவதற்கு தான் ஒப்புதல் வழங்கப் போவதில்லை என ஒபாமா தெரி வித்துள்ள நிலையில், அந்தக் கருத்து நிராகரிக்கப்படும் என தான் நம்புவதாக அவரது கட்சி யைச் சேர்ந்த செனட்டர் ஒருவர் கூறுகிறார்.

செனட்டில் இந்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்ட நிலையில், இது வாக்கெடுப்புக்காக மக்களவைக் குச் செல்லும்.

அந்த அவையிலும் இதற்கு இதற்கு அங்கீகாரம் கிடைத்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(தி)

# ் தொடரும் கனமழை க் குழு தயார் நிலை



ப்படுகின்றன. ங்கவில்லை. றை உடனுக் ணியாளர்கள்

ான பகுதியில் முகாம்கள் ல் உள்ளன. னவகங்களில் ல் உள்ளனர். லும் ஆரம்ப னகள் தயார்

மாநகராட்சி மற்றும் சென்னை குடிதண்ணீர் வழங்கல் மற் றும் கழிவுநீர் அகற்றும் சபை ஆகியவை சார்பில் தண்ணீரை உறிஞ்சி வெளியேற்றும் இயந்திரங்கள், லொறிகள், 112 பம்பு செட்டுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய பேரிடர் மீட்புக் குழுவின் 6 குழுவினரும், மாநில பேரிடர் மீட்புக் குழுவின் 6 குழுவினரும் வரவழைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளனர். தேசிய பேரிடர் மீட்புக் குழுவின் 10 படகுகளும், மீன்வளத்துறையின் 12 படகுகளுமாக மொத்தம் 22 படகுகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மழைநீர் அதிகமாக தேங்கும் இடங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மின் இணைப்பு துண்டிக்கப்படும். நீர் அகற்றப்பட்ட பிறகே மின் இணைப்பு வழங்க மின்சார சபை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகிறது – என்றார்.

(தி)

# த்தாளருக்கு மேன் புக்கர் பரிசு



உண்பதை

ரிசு பெற்ற ஓர் டாரின் படைப்

புக்கள் உட்பட 155 புத்தகங்களைப் பின் தள்ளி ஹான் காங் இந்தப்பரிசை வென்றுள்ளார். அவருக்கு 50 ஆயிரம் பிரிட்டன் பவுண்டுகள் (சுமார் ரூபா 144 இலட்சம்) ரொக்கப் பரிசு வழங்கப்பட் டது. இத்தொகையை, நாவலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டெபோரா ஸ்மித்துடன் நாவலாசிரியர் ஹான் காங் பகிர்ந்து கொண்டார்.

'தி வெஜிட்டேரியன்' நாவலை போர் டோ பெல்லோ புக்ஸ் வெளியிட்டிருந்தது. இயோங் ஹை என்ற குடும்பத்தலைவி பற்றிய கதை இது. தென்கொரி யாவில் இறைச்சி உண்ணுதலைக் கைவிடுதல் என்பது வழக்கத்தில் இல்லாதது. இயோங் ஹை இறைச்சியைக் கைவிட எடுக்கும் முடிவு, பின்னணி தொடர்விளைவுகளை இந்தநாவல் விவரித்துச் செல்கிறது.

(தி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

நட்சத்திரப் பொதுப்பலன்கள் என்ற தலைப்பில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உதயனில் சுவாதி, விசாகம் நட்சத்தி ரங்களது பலன்களைப் பார்த்தோம். இன்று அனுஷம், கேட்டை நட்சத்திரங்களது பலன்களைப் பற்றிப்பார்ப்போம்.

## அனுஷம்

அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்த நீங்கள் மற்றவர்களால் மதிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பவராதலால் நீங்கள் அழகாகப் பேசுவீர்கள்.

சில சமயங்களில் உங்களுடைய சாதுரியமான பேச்சால் மற்றவர்களிடம் உங்களுக்கான மதிப்பை பெற்றுவிடுவீர்கள். பொருள் சேமிப்பை விரும்புவீர்கள். எதிர்காலத்துக்கானதிட்டங்களை தெளிவான வரையறுத்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்களின் முயற்சி வெற்றியடையக் கடுமையானஉழைப்பைவெளிப்படுத்தத் தயங்கமாட்டீர்கள். நல்ல குணவான், தாம்பூலப்பிரியன், எல்லோராலும் புகழப்படுபவர், கண்ணியம் உடையவர், பக்திமான், நீதிமார், தூய்மையானவர், சிவந்த கண்களை உடையவர், மனிதர்களுள் சிறந்தவர், மானஸ்தர், பெண்களால் விரும்பப்படுபவர், அகன்றமார்பை உடையவர், பெற்றோரை இரட்சிப்பவர், யானை போன்ற வேகம்உடையவர், நல்ல வார்த்தைகளைப் பேசுபவர், செல்வம் உடையவர், கோபி. உற்றார், உறவினர்களிடம்செல்வாக்குடன்திகழ்வர். மேன்மையான அந்தஸ்து உள்ள பதவிகளில் வீற்றிருப்பர். அரசால் பாராட்டுப் பெறும் யோகமுண்டு. பிறர்மனம், குணம் அறிந்து செயற்படுவதில் வல்லவர்கள். ஊர் ஊராகச்சுற்றும் குணம் கொண்ட இவர்கள், பிறரிடம் மனம் விட்டுப் பேச மாட்டார்கள்.

1. அனுஷம் முதல் பாதத்தில் பிறந்தவர் நல்ல பதவியை உடையவர், நியாயக்காரர், சக்தியவான், ஆசாரக்காரர்.
2. அனுஷம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் புல்லாங்குழலிசையில் பிரியம் உடையவர், நல்ல வாய்ஜாலம் உடையவர், சிறந்த புத்திமான், கருமி.
3. அனுஷம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் புத்திமான், அழகர், மெல்லியகுரல் உடையவர், கல்விமான்.
4. அனுஷம் நான்காம் பாதத்தில் பிறந்தவர் நச்சுச் சொல்லை உடையவர், நாணயம் உடையவர்.

## கேட்டை

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், அனைத்து செயல்களும் முழுமையாக முடிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வலுவாகக் கொண்டவராய் இருப்பீர்கள். உங்களிடம் ஒப்படைக்கப்படும் எந்தக் காரியத்தையும் முழுமையாக செய்து முடிப்பீர்கள்.

உடல் ஆரோக்கியத்தை மிகவும் ஆர்வமாகப்பேணிக்காப்பீர்கள். எந்தச்சூழ்நிலையையும் சாமாளிக்கக்கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள விரும்புவீர்கள். மற்றவர்களிடம் உண்மையான உழைப்பையும் நேர்மையான செயல்களையும் எதிர்ப்பார்ப்பீர்கள்.

உங்களது நேர்மையான செயற்பாடுகளால் மற்றவர்களிடம் உங்களுக்கானமதிப்பைஅதிகரித்துக்கொள்வீர்கள். வலிமை வாய்ந்தவர், துஷ்டர்களின் நண்பர், பொய் பேசாதவர், உபாயர், பக்தி உள்ளவர், கோபம் உள்ளவர், உள்மூச்சு உள்ளவர், புத்திமான், உயரமானவர், சிற்றுண்டிப்பிரியர், அரசர்களுக்கு இனியவர், கண்கள் சிவந்து இருப்பவர், வலது புறத்தில் மரு இருப்பவர், கெட்ட சொல்லைத் திடமாகக் கொள்ள மாட்டார், பொய்யை மெய்யாக மாற்றும் திறமையுள்ளவர், நற்கேள்வி உள்ளவர், கடினச்சொல்லைஉடையவர். கல்வியைப் பெற்றுத் திகழ்வர். தைரியமும் துணிச்சலும் இயல்பாக இருக்கும். குறும்புத்தனமும், நகைச்சுவையும் கொண்டவர்கள். அழகாகவும், சுருக்கமாகவும் பேசுவதில் வல்லவர்கள். முன்நின்று எந்தச் செயலையும் நடத்திக் காட்டும் சாமர்த்தியம் உண்டு. முன்கோபம் இருந்தாலும், எவருக்கும் தீங்கு எண்ண மாட்டார்கள்.


1. கேட்டை முதல் பாதத்தில் பிறந்தவர் எழுதவல்லவர், பரிகாசம், செய்பவர், விளையாட்டுச் செய்கை உடையவர், மகிழ்ச்சியுடைய மனம் உள்ளவர்.
2. கேட்டை இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் சங்கீதப்பிரியன் வாய்ஜாலம் உள்ளவர், ஈகைக்குணம் உடையவர், போகி, கல்மனம் உடையவர்.
3. கேட்டைமூன்றாம் பாதத்தில் பிறந்தவர் கண்நோய் உடையவர், அன்னியரின் தொழில்களைத் தனது என்று நினைத்துச் செய்பவர்.
4. கேட்டை நான்காம் பாதத்தில் பிறந்தவர் கலகம் செய்வதில் விருப்பம் உடையவர், முன்னோடி, தன்குல மேன்மையைக் கூறுபவர்.

(தொடரும்)

# தேர்தல் முடிவுகளைக் கண்டறியும் கருத்துக் கணிப்புக்கள்

வெ.சந்திரமோகன்

குழந்தைகள், தோட்டத்தில் உள்ள செடிகள் எப்படி வளர்கின்றன என்று வேர்களுக்கு அடியில் தோண்டிப் பார்த்துத் தெரிந்துகொள்ள முயல்வதுபோன்றதுதான், கருத்துக் கணிப்புகள் என்று ஜே.பி. பிரிஸ்ட்லி எனும் ஆங்கில எழுத்தாளர் கிண்டலாகக் குறிப்பிடுவார். ஒரு அரசின் பதவிக்காலம் முடிவடையும் தறுவாயிலிருந்து, அடுத்த தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறும் என்ற விவாதங்கள் எழுவது எல்லா நாடுகளிலும் வழக்கமாக நடக்கும் விடயம்தான். கள நிலவரம், முந்தைய தேர்தல் முடிவுகள், ஆளுங் கட்சியின் செயற்பாடுகள், ஊழல் முறைகேடு புகார்கள், உட்கட்சிக் குழப்பம் என்று பல்வேறு விடயங்களின் அடிப்படையில் அடுத்த தேர்தலில் இந்தக் கட்சிதான் வெற்றி பெறும் என்றும், பல்வேறு நிறுவனங்கள், ஊடகங்களுடன் இணைந்தோ தனிப்பட்ட வகையிலோ ஆய்வுகளை நடத்தி கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிடுகின்றன.



### அமெரிக்க முன்னுதாரணம்

1824 இல் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில்தான் முதன்முதலில் அதிகாரபூர்வமாகக் கருத்துக் கணிப்புக்கள் நடத்தப்பட்டன. 1916 இல் நடந்த அதிபர் தேர்தலின்போது 'லிட்டரரி டைஜஸ்ட்' எனும் இதழ் அமெரிக்கா முழுவதும் பரவலாகக் கருத்துக் கணிப்பு நடத்தி, அடுத்த அதிபர் வுட்ரோ வில்ஸன்தான் என்று கூறியது. சொன்னதுபோலவே, வுட்ரோ வில்ஸன்தான் வெற்றிபெற்றார். முதன்முதலில் கருத்துக் கணிப்பு நிஜமானது, அந்தத் தேர்தலில்தான். அடுத்து நடந்த பல தேர்தல்களிலும் லிட்டரரி டைஜஸ்ட் இதழின் கருத்துக் கணிப்புகள் நிதர்சனமாகின. பல நாடுகளில் இந்த வழக்கம் பரவத் தொடங்கியது.

இந்தியாவில் கருத்துக் கணிப்புக்கள் தொடர்பான தெளிவான பார்வையை உருவாக்கியவர் ஊடகவியலாளர் பிரணாய் ராய். 1980-களில் நடந்த தேர்தல்களின்போது வாக்காளர்களிடம் குறிப்பிட்ட சில கேள்விகளைக் கேட்டு, அதன் அடிப்படையில் தேர்தல் முடிவுகளைக் கணிக்கும் வழக்கத்தைக் கொண்டுவந்தார். ஃப்ரண்ட்லைன், அவுட்லுக், இந்தியா டுடே போன்ற இதழ்கள் கருத்துக் கணிப்புகளை நடத்தத் தொடங்கியதையடுத்து, பிரபல நாளிதழ்களும் அதில் ஆர்வத்துடன் இறங்கின. 1990-களில் தொலைக்காட்சி ஊடகங்களின் வளர்ச்சி அதிகரித்ததைத் தொடர்ந்து, கருத்துக் கணிப்புக்களும் பரவலாக மக்களைக் கவரத் தொடங்கின. ஒபீனியன் போல் (Opinion Poll) எனப்படும் கருத்துக் கணிப்புகளைப் போலவே, எக்ஸிட் போல் எனப்படும் வாக்குக் கணிப்புக்களும் பிரபலமடையத் தொடங்கின.

### தொடங்கிவைத்த தூர்தர்சன்

1996 இல் இந்தியாவில் நடந்த மக்களவைத் தேர்த லின்போது, தூர்தர்சன் தொலைக்காட்சி அனைத்து இந்திய அளவில் வாக்குக் கணிப்புகளை (எக்ஸிட் போல்) நடத்தியது. தேர்தல் நடந்து முடிந்த அன்று மாலையே, தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பது பற்றி குறைந்தபட்ச பார்வையை வாக்காளர்களுக்கு அந்த நிகழ்ச்சி கொடுத்தது. தனியார் தொலைக்காட்சிகள் பல்கிப் பெருகி விட்ட பின்னர், இந்தப் போக்கு கணிசமாக அதிகரித்துவிட்டது. இன்றைக்குத் தேர்தல் பரப்புரைகளின் சலசலப்புக்குச் சமமாக, ஊடகங்களில் நடக்கும் கருத்துக் கணிப்பு விவாதங்கள் பல பரிமாணங்களை அடைந்திருக்கின்றன. பொதுவாகவே கருத்துக் கணிப்புக்களை விடவும், வாக்குக் கணிப்புகளே தேர்தல் முடிவுகளை ஓரளவு சரியாகக் கணிக்கின்றன என்ற எண்ணம் பலருக்கு உண்டு. காரணம், ஓட்டுப் போடும் முன்பு எடுத்த முடிவு, வாக்குச் சாவடியில் கூட மாறும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, ஓட்டுப் போட்ட பின்னர் சாவடியிலிருந்து வெளியில் வரும் வாக்காளர்களிடம் எடுக்கப்படும் ஆய்வுகள் ஓரளவு சரியாகக் கணிப்பதாகக் கருதப்படுகிறது. கருத்துக் கணிப்பு அல்லது வாக்குக் கணிப்பு பலிக்குமா என்பது தேர்தல் முடிவுகள் வெளியாகும் அன்று தெரிந்து விடுகிறது.

### தவறும் வாய்ப்பு

கோடிக்கணக்கான மக்கள் பங்கேற்கும் தேர்தல் தொடர்பாக, சில ஆயிரம் எண்ணிக்கையிலான மக்களிடம் நடத்தப்படும் ஆய்வுகள் பல சமயம் பொருந்தாமல் போகின்றன.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசி நோக்கிய ஒரு பயணம்...

## அனுபவப் பகிர்வு

■ லிங்கபுத்ரன்

# வாரணாசி இந்துப் பல்கலைக்கழகம்

['காசி நோக்கி ஒரு பயணம்' என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் உதயனில் 17 ஆம் பக்கத்தில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி இது.]

அன்னபூரணி அம்பாளின் அறுசுவை உணவினால் வயிறும், மனமும் நிறைந்திருந்தன. உடல் அசதியால் தூக்கத்தை நாடினாலும் இன்னும் ஒரு நாளில் பயணத்தை நிறைவு செய்ய வேண்டியிருந்ததால் தொடர்ந்தும் சில இடங்களுக்குச் செல்வதென்று முடிவு செய்தோம்.

ஆலயத்திலிருந்து நேரடியாகத் தங்கியிருந்த இடத் துக்கு வந்து, காசி விஸ்வநாதர் ஆலயச் சுற்றாடலில் வாங்கி வைத்திருந்த சிவலிங்கம், உருத்திராட்சம் போன்றவற்றை அறையில் வைத்துவிட்டு மீண்டும் புறப்பட்டோம்.

அறைக்குச் சென்று நாங்கள் திரும்புவதற்குள் பப்ளு எங்களுக்காக கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வாசலில் காத்திருந்தார். இந்தப் பயணத்தின் போது இந்திய வரலாற்றுடன் தொடர்புபட்ட ஓர் இடத்துக்கும் சென்று வந்தோம். அது இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு பிறந்த ஆனந்தபவன். அங்கு தான் இந்திரா காந்தியின் திருமணம் கூட நடந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்திரா காந்தியின் திருமண மேடை எனப் பெயரிடப்பட்ட மேடை இன்னமும் அங்கு மெருகூட்டப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

காரில் ஏறி நாங்கள் முதலில் சென்றது வாரணாசியில் அமைந்துள்ள வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்துக்குத்தான்.

மிகப் பெரியதொரு நிலப்பரப்பில் - ஏக்கர் கணக்கிலான காணியில் பல்கலைக்கழகம் அமைந்திருந்தது. அதன் உள்ளக வீதிகள் பொதுப் போக்குவரத்து மார்க்கங்களாக இருந்தன.

வானுயர்ந்த கட்டடங்களில் ஒவ்வொரு பீடங்களும் அமைந்திருந்தன. 1916 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகத்தின் அனேகமான கட்டடங்கள் ஒரே வடிவமைப்பைக் கொண்டிருந்தன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் இராமநாதன் மண்டபத்தைப் போன்று அவை தோற்றமளித்தன. யாழ். பல்கலைக் கழகத்தின் ஸ்தாபகத்துக்கு முன்னரே வாரணாசி இந்துப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததனால், இங்கு இருக்கின்ற இராமநாதன் கட்டடம் அதன் வடிவமைப்பைப்பை பின்பற்றியே அமைக்கப்பட்டதோ என்று சிந்திக்க வைத்தது.

பல்கலைக்கழகத்தின் உள்ளக வீதிகளின் வழியாகச் சென்று பளிங்கு மாளிகை போன்றதொரு அமைப்புடன் கூடிய சிவாலயத்தைச் தரிசிக்கக் கிடைத்தது.

அத்துடன் சக்தி பீடங்களில் ஒன்றெனக் குறிப்பிடப்படும் அலோபி தேவி அம்மன் ஆலயம், சோமேஸ்வரர், பரத்வாஸர் ஆச்சிரமம் போன்றவற்றுக்கும் சென்று தரிசிப்பதற்கு வாய்ப்புக் கிட்டியது.

தொடர்ந்து வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் லங்கா என்ற இடத்தில் உள்ள சுயம்பு ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வழிபட்டோம். ஸ்ரீ துளசிதாஸருக்கு ஆஞ்சநேயர் நேரில் தோன்றி தரிசனம் கொடுத்த பின்னர், துளசிதாஸரின் வேண்டுகோளுக்கிணங்க பக்தர்களுக்குக் காட்சிதரும் வகையில் லங்காவில் சுயம்புவாகக் கோவில் கொண்டதாக வரலாற்றை விளக்கினார் பப்ளு.

இந்த ஆலயத்திலுள்ள சுயம்பு ஆஞ்சநேயரை வணங்குவதால் சகல விதமான கஷ்டங்களுக்கும் நிவாரணம் கிடைக்கும் என்பதால் இந்த ஆஞ்சநேயரை ஸ்ரீ சங்கடமேசன ஹனுமான் என்று அழைக்கிறார்கள்.

தொடர்ந்தும் சின்னச்சின்னக் கோயில்கள் பலவற்றுக்குச் சென்ற பின் காசி யாத்திரையின் முக்கிய அம்சமாகக் குறிப்பிடப்படுகின்ற கௌடி மாதா (சோழி அம்மன்) கோயிலுக்கு வந்தோம். காசி யாத்திரை செல்கின்ற எவரும் கட்டாயமாக இந்தக் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும் என்று கூறப்படுகிறது. யாத்திரையின் முழுப் பயனையும் கௌடி அம்மனிடமிருந்தே பெற்றுக் கொள்கிறோம் என்று சொல்லப்பட்டது.

ஆலயம் சற்று உயரமாக இருந்தது. கீழே விற்கப்படுகின்ற சோழிகளையும் தீபமொன்றையும் வாங்கிக் கொண்டு படிக்கட்டுகளின் வழியே மேலே சென்றோம். எங்களிடமிருந்து தீபத்தையும், அர்ச்சனைப் பணத்தையும் வாங்கிக் கொண்ட பண்டா என்று அழைக்கப்படுகின்ற பூசகர்கள் மந்திரங்களைச் சொல்லியபடி சோழிகளை அம்பாளின் திருப்பாதத்தில் சமர்ப்பிக்கச் செய்தார்கள்.

ஜெயம் கௌடி மாதா, மகாதேவி, ஜெய காசி நிவாசனம், சர்வதுக்க ஹரதேவி, ஹரதேவி ஹரப்பிரியே, சமுண்டே நாராயணியம் நமோஸ்துதே என்று அர்ச்சகர் சொல்வதைத் திரும்பச் சொல்லியவாறே தேவியின் பாதத்தில் சோழிகளைப்போட வேண்டும். முடிவில் அவற்றில் சில சோழிகளை எங்களிடம் தந்து வீட்டுக்குக் கொண்டு சென்று வைக்குமாறு கூறி ஆசீர்வதிக்கிறார்கள். அந்தச் சோழிகளை வணங்கி பக்குவப்படுத்திக் கொண்டு அன்றைய பயணத்தை முடித்துக்கொண்டு தங்ககத்துக்கு வந்து சேர்கிறோம்.

மறு நாள் அதிகாலை 2 மணிக்கு காசி விஸ்வநாதர் ஆலயத்துக்குச் சென்று பூஜைகளைப் பார்ப்பதற்கும், விஸ்வநாதப் பெருமானுக்கு நாங்களே நேரடியாக எங்கள் கைகளால் அபிசேகம் செய்வதற்குமான ஒழுங்குகளை பப்ளு செய்திருந்தார்.

எந்த ஆலயமாக இருந்தாலும் அதிகாலை வேளைகளில் பூஜை காண்பது மிகவும் ஆனந்தமானதொன்று.

எந்தவிதமான இடையூறுகளுமின்றி, அமைதியாக இறைவனைத் தரிசிப்பதற்கு உகந்த நேரம் அதுவே.

வழக்கமாக வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை 4.30 மணிக்கு நல்லூர் கந்தனின் பள்ளியறைப் பூஜையைக் காண்பதை வழக்கமாகக் கொண்ட எனக்கு, காசியில் அதிகாலை பூஜை பார்க்கப் போவதன் பெறுமதி தெரியும். மிகவும் ஆவலுடன் அதிகாலை 2 மணிக்குப் புறப்படுவதாயின், ஒரு மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும் என்ற முனைப்போடு கைத்தொலைபேசியில் அலாரம் வைத்துவிட்டுத் தூங்கச் சென்றோம்.

(தொடரும்)


> மிகப் பெரியதொரு நிலப்பரப்பில் — ஏக்கர் கணக்கிலான காணியில் வாரணாசி இந்து பல்கலைக்கழகம்அமைந்திருந்தது. அதன் உள்ளக வீதிகள் பொதுப் போக்கு வரத்து மார்க்கங்களாக இருந்தன. வானுயர்ந்த கட்டடங்களில் ஒவ்வொரு பீடங்களும் அமைந்திருந்தன. 1916 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகத்தின் அனேகமான கட்டடங்கள் ஒரே வடிவமைப்பைக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்



1568 - இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் மகாராணி, ஸ்கொட்லாந்து அரசி மேரியைக் கைது செய்ய உத்தரவிட்டார்.

1743 - ஜீன் பிறே கிறிஸ்ரியனால் சென்ரிகிறேட் வெப்பமானி உருவாக்கப்பட்டது.

1780 - புதுஇங்கிலாந்தின் இருண்ட நாள். தடித்த கரும்புகையும், முகிலும் ஒன்று சேர்ந்து கிழக்கு கனடா மற்றும் அமெரிக்காவின் புது இங்கிலாந்து பகுதியை மு.ப. 10.30 மணியளவில் முற்றாக இருளாக்கின.

1943 - இரண்டாம் உலக மகா யுத்தம் 1944 மே முதலாம் நாள் திங்கட் கிழமை நோர் மண்டி தரையிறக்க நாளாக இருக்க வேண்டுமென பிரித்தானிய பிரதமர் வின்சன் சேர்ச்சில் மற்றும் அமெரிக்க ஜனாதி பதி பிராங்ளின் டிறூஸ்வெல்ற் ஒழுங்கமைத்தனர். சீரற்ற காலநிலையால் அது ஒரு மாதத்தால் தள்ளிப் போடப்பட்டது.

1950 - நியூயேர்ஸி நகர தென் அம்போய் துறைமுகத்தில் பாகிஸ்தானுக்கு அனுப்பவென வைத்திருந்த வெடிபொருள்கள் ஏற்றப்பட்ட சரக்கு மிதவைப் படகில் வெடிபொருள் வெடித்ததில் நகரில் பேரழிவு ஏற்பட்டது.

1950 - இஸ்ரேல் கப்பல்களுக்கும், வர்த்தகத்துக்கும் சுயஸ் கால்வாய் மூடப்படுவதாக எகிப்து அறிவித்தது.

1961 - அஸாம் சில்வர் புகையிரத நிலையத்தில் பெங்காளி மொழி இயக்கத்தி னரால் பெங்காளி மொழி அங்கீகரிக்கப்பட வேண்டும் என நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் சுட்டதில் 11 பெங்காளிகள் சாவு.

1962 - நியூயோர்க் நகர் மடிசன் சதுக்கத்தில் இடம்பெற்ற அமெரிக்க ஜனாதி பதி ஜோன் எப். கெனடியின் பிறந்தநாள் நிகழ்வில் மரிலின் மன்றோ பிறந்த நாள் வாழ்த்துப் பா பாடினார்.

1984 - உங்கள் அதிர்ஷ்டத்தை அழுத்துங்கள் எனும் தொலைக்காட்சி நிகழ்ச்சி விளையாட்டில் மைக்கல் லார்சன் எனும் போட்டியாளர், 110,000 டொலர் பரிசு பெற்றார்.

1991 - குறேசியர் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் சுதந்திரத்துக்கு வாக்களித்தனர்.

1999 - 'தமிழர்கொலை' அட்டையுடன் லண்டனில், தென்னாபிரிக்கா - இலங்கை உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் போது கிரிக்கெட் மைதானத்துக்கு மேலாக விமானம் ஒன்று வட்டமடிப்பு.

2002 - பொலிஸாரிடையே தகராறு. மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் சப் - இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக்கொலை.

2003 - தென் பகுதியில் வெள்ளத்துக்கு 120 பேர் சாவு. 100 பேரைக் காணவில் லையெனத் தெரிவிப்பு. காலநிலை சீரின்மையால் மீட்புப் பணி தாமதம்.

2003 - குமார் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் மொறட்டுவ சமன் சுட்டுக்கொலை.



# கண்மணி



கண்மணி ராணி பாரம்மா!
கதையொன்று சொல்வேன் கேளம்மா!
விண்மணி போன்று சிரியம்மா!
விளக்கு நீ எனக்கு ஒளியம்மா!

சித்திரக் கிளியம்மா பேசாயோ!
செந்தமிழ்க் குயிலாய்ப் பாடாயோ!
உத்தமர் போல வளராயோ!

சாதனை பலவும் படைத்திடுவாய்
சரித்திர ஏட்டில் நிலைத்திடுவாய்
சாதியாம் சுவரை உடைத்திடுவாய்
சமரசம் நாட்டில் வகுத்திடுவாய்.

# மலைராணிக்கு உதவிய தெனாலிராமன்

மலை நாட்டு மகாராணி அவசரமாகத் தெனாலிரா மனை வரச் சொன்னதாகச் செய்தி வந்தது! தெனாலி ராமன் அவசர அவசரமாக மலைராணியின் விடுதிக்குச் சென்றான்.

தெனாலிராமனைக் கண்டதும் கண் கலங்கி அழுதார் மகாராணி! "என்ன நடந்தது?" என்று பரிவுடன் கேட்டான் தெனாலிராமன்.

"ஒரு வாரத்துக்கு முன்பு இரவு அரசர் பேசிக் கொண்டிருக்கும்போது எனக்குக் கொட்டாவி வந்து விட்டது. கொட்டாவி விட்டேன். அரசருக்கு உடனே கோபம் வந்து விட்டது. மரியாதை தெரியாதவள் நீ என்று ஏசி விட்டு அந்தப் புரத்தை விட்டுச் சென்று விட்டார். ஒரு வார காலமாக இங்கு வருவதில்லை. அரண்மனையில் எங்கு சந்தித் தாலும் பேசுவதே இல்லை" என்று கூறி அழுதார்.

"இவ்வளவுதானே! இதை நான் சரி செய்து விடுகிறேன்" என மலைநாட்டு ராணியைச் சமாதானம் செய்து விட்டுச் சென்றான் தெனாலிராமன்.

ஆலோசனை மண்டபத்தில் இராயல சீமைப் பகுதியில் உணவு விளைச்சலை உடனடியாக அதிகப்படுத்த வேண்டுமே, அதற்கு என்ன செய்யலாம் என விவாதித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனைகளைக் கூறினார்கள். அவர்கள் கூறிய யோசனைகள் எதுவும் சரியாக வரவில்லை. தெனாலிராமனிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது.

"வயல்களில் பயிர் வளர்ச்சிக்கு உரம் தேவை. தழை உரம் தான் தலைசிறந்தது. காடுகளிலிருந்து தகுதியான தழைகளை விவசாயிகளுக்கு இலவசமாக அரசு வழங்கினால், அவர்களும் அதைப் பயன்படுத்துவார்கள். விளைச்சலும் அதிகமாகும்" என்றான் தெனாலிராமன். எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டனர். தெனாலிராமனைப் பாராட்டினர்.

"இன்னும் அதிக மகசூல் தரும் நெல் ரகங்களையே விதைகளாகப் பயன்படுத்த, அதிக விளைச்சல் தரும் நெல் விதைகளை அரசே இலவசமாக வழங்க வேண்டும்" என்றான் தெனாலிராமன். இதையும் ஒருமனதாக எல்லோரும் பாராட்டினார்கள்.

மேலும், தெனாலி வட்டாரத்தில், அந்தக் காலத்தில் பயிரிடப்பட்ட உயர்ரக நெல் விதைகள் அமோக விளைச்சல் தருபவை. மற்ற நெல் இனங்களை விட இவை மும்மடங்கு விளைச்சல் தருகின்றன என்றான் தெனாலிராமன். எல்லோரும் ஆவலுடன் கவனித்தனர். மன்னரும் ஆவலுடன் அப்படிப்பட்ட நெல் விதைகள் எங்கே கிடைக்கும் எனக் கேட்டார். "விதைகள் தருவிப்பதில் தடையில்லை. அந்த விதை[illegible]வர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண் டும் என ஒருநியதி இருக்கிறது. அதைக் கடைப் பிடிப்பதும் கடினம்" என்றான் தெனாலிராமன்.

பயனுள்ளவற்றைப் பயன்படுத்தும் போது வரும் துன் பங்களைக் கண்டு அஞ்சலாமா? என்ன நிபந்தனை கூறு. அதை நிறைவேற்றிவிடலாம் என உறுதியாக மன்னார் கேட்டார்.

தெனாலிராமன் சிறிது சிந்தனை செய்துவிட்டு "நிபந்தனை இதுதான். இந்த ரக நெல் விதைகளை விதைப்பவர்கள், ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அவர்கள் வாழ்நாளில் ஒருமுறை கூடக் கொட்டாவி விட்டவர்களாக இருக்கக் கூடாது. வாழ்நாளில் இதுவரை கொட்டாவி விடாதவர் எவரேனும் இந்தச் சபையில் இருக்கிறீர்களா?" எனத் தெனாலிராமன் கேட்டதும், அவையிலிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து திருதிருவென விழித்தார்கள்.

மன்னர் கூறினார் "தெனாலிராமா, நீ எதற்காக இப்படி ஒரு கதை கூறினாய் என்பதை நான் புரிந்து கொண்டேன். கொட்டாவி விடாதவர்கள் உலகில் எவருமில்லை என்பதை எனக்கு உணர்த்திவிட்டாய்".

தழை உரம் பற்றியும், இலவச விதை விநியோகம் பற்றியும் கூறியதற்காக ஒரு பரிசும், தெனாலிராமனுக்குத் மலைநாட்டு ராணியின் சார்பாக ஒரு பரிசும் தரப்படும் என மன்னர் அறிவித்தார்.

அவையினர் கைதட்டி ஆரவாரித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒழுக்க சீலராய் வாழ்வோம்

தெல்லியூர்த்தேவி

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவரின் பொன்வாக்கு. ஒருவர் பல்வேறு திறமைகள் கொண்டவராக விளங்கலாம். ஆனால் அந்தத் திறன்களையெல்லாம் பயன்படுத்திப் பயன் பெறவேண்டுமானால், அவர் ஒழுக்கமுடையவராய் இருந்து அவற்றையெல்லாம்கையாண்டு பயன் பெறவேண்டும். ஆகவே சிறுவர்களாகியநாங்கள் ஒழுக்கமுடையவர்களாக வாழ எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வோமாக.

சிறு வயதிலிருந்தே தாய் தந்தையருக்குப் பணிந்து அவர்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றி, ஒழுங்காகப் பாடசாலை சென்று கல்வி கற்று ஆசிரியர்களை மதித்து பாடங்களைப் பயின்று கல்வி கேள்விகளில் சிறப்புப் பெறுதல் நல்லொழுக்கம் எனக் கொள்ளப்படும். அதே போல சமயம் சம்பந்தமான செயற்பாடுகளையும் விளங்கிக் கொண்டு அவற் றைத் தவறாது கடைப்பிடித்து ஒழுகி வருதல் வேண்டும். மகாத்மா காந்தி மனிதருள்மாணிக்கம் எனப் போற்றப்படு வதற்கு அவர் ஒழுக்க சீலராக, மக்களுக்கு முன்னுதாரண புருராக வாழ்ந்து காட்டியமையே காரணம் ஆகும். அவர் மாண வச் செல்வங்களுக்கு கூறினார்; நீங்கள் எதைப்படிக்க வேண்டும் என நான் கூற வரவில்லை. ஆனால் முக்கியமாக நல்லொழுக்கத்துடன் வாழப் பயில வேண்டும் என்றார். காந்திஅடிகளின் இந்தக் கூற்றின் மூலம் நல்லொழுக்கம் பேணுதலே இன்றைய தலைமுறையினரது தலையாய கடமை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி அல்லவா?

இன்றைய மாணவரே நாட்டின் வருங்காலத் தலைவர்கள். ஏடு தூக்கும் சிறுவர்களே நாடு காக்கும் நன்மக்களாக விளங் கப் போகிறார்கள். இன்றைய சிறுவர்கள் ஒழுக்கமுள்ள நாளைய சமுதாயத்தை வழி நடத்தப் போகும் பிரமுகர்களா வார்கள். நல்ல பண்பான சொற்பிரயோகங்கள், பெரியாரை ஆசிரியரை, தாய்தந்தையரை மதித்தல், தன்கொள்கையில் உறுதியாக இருத்தல், பிறருக்கு உதவுதல், அறத்தின் வழியில் பொருளீட்டல், மடமையைப் போக்குதல், மூத்தோர் குறிப்பறிந்து நடத்தல் போன்ற மனித நேய செயற்பாடுகளைக் கடைப்பிடித்து மனிதன்மனிதனாகவாழ்தலே ஒழுக்கமானவாழ்வு ஆகும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற முதுமொழிக்கமைவாக ஐந்தில் இருந்தே எம்மை நாம் கட்டிக்காத்து காற்றுள்ள போதே தூற்றிக்கொண்டு வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கப்பழகுதல் வேண்டும் . நன்றும் தீதும் பிறர் தர வாரா. எனவே நன்மைகளைச் செய்யவும் செய்விக்கவும் கற்றுக் கொண்டு ஒழுக்க சீலர்களாக வாழ்வோமாக.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

# முன்யோசனை இல்லாத திட்டங்களால் பயன் என்ன?

கடந்த சில மாதங்களாக வாட்டி வதைத்த வரலாறு காணாத வெப்பநிலையை எமது நினைவுகளிலிருந்து வெகு ஆழத்தில் புதைத்துவிடுமளவுக்கு கடந்த ஓரிரு நாள்கள் பெய்த அடை மழையின் கோரத்தாண்டவம் அமைந்திருந்தது.

எப்படிப்பட்ட வெப்பநிலையையும் தாங்கிவிடலாம். ஆனால், இந்தமாதிரி மழையை ஓரிரு நாள்கள் கூட தாங்கமுடியாது என மக்கள் தமக்குள்ளே பேசிக்கொண்டதையும் வேதனையில் நொந்துகொண்டதையும் உணரமுடிந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெய்ததைப்போன்ற இடைவிடா மழை தொடர்ந்தும் சில நாள்களுக்கு அதே வீரியத்துடன் பெய்திருந்தால், சில மாதங்களுக்கு முன்னர் சென்னையை சேதப்படுத்தி, அங்குள்ள மக்களை நிர்க்கதியாக்கிய நிலைமை தலைநகர் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் என்றால் அது மிகையல்ல.

ஒருசில மணிநேரம் கனமழை பெய்தவுடனேயே முக்கிய வீதிகளும் சந்திகளும் நீரில் மூழ்கி வெள்ளக்காடாகத் தோன்றும் அவலநிலை கொழும்பில் மட்டுமல்ல, நாட்டின் முக்கிய நகரங்களில் வழமையாகிவிட்டது.

பலகோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து அதிவேக வீதிகளை அமைத்த ஆட்சியாளர்கள், வெள்ளநீர் விரைவாக வடிந்து செல்லத்தக்க வகையில் வடிகால்களை அமைக்காமையின் விளைவுகளை நாம் இன்று அனுபவிக்க நேர்ந்துள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு அதிவேக வீதிகள் தேவையானவை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், அடிப்படை வசதிகளை, கட்டமைப்புகளை நேர்த்தியாக அமைத்துக்கொண்ட பின்னர்தான் அடுத்தகட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்ற விடயத்தைக்கூட ஆட்சியாளர்கள் உணராமல் போனமை ஆச்சரியமளிக்கின்றது.

கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக வீதியை அமைப்பதற்காக ஒரு கிலோ மீற்றருக்கு பதினாறு மில்லியன் அமெரிக்க டொலர்களை (233 கோடி இலங்கை ரூபா) மகிந்த ராஜபக்ச அரசு செலவு செய்திருந்தது. உலகில் நான்கு வழிப் பாதைக்காக அதிக பணம் செலவிடப்பட்ட வீதியாகவும் இதுவே அமைந்திருந்தது. இதில் எவ்வளவு தரகுப் பணம் பெறப்பட்டிருக்கும் என்பதை சாதாரண மக்களாலும் ஊகிக்க முடியும். அதுபோன்று கொழும்பு நகரை அழகுபடுத்துவதாகக் கூறிக்கொண்டு மேற்கொண்ட செலவுகளும் கொஞ்சநஞ்சமல்ல.

எதிலுமே கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் பெரும் தரகுப்பணத்தை (கொமிஷன்) பெற்றுக்கொள்வதற்காக உரிய முறைமையைப் பின்பற்றாது அவசர அவசரமாக ஒப்பந்தங்களைக் கொடுத்த முன்னைய ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளை தற்போதைய ஆட்சியாளர்களும் விட்டுவிடக் கூடாது.

தற்போதைய அரசும் முன்னைய அரசு சென்ற தடத்திலேயே பயணிக்கின்றது என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நாளும் பொழுதும் வலுப்பெற்றுவரும் நிலையில், அடிப்படைக் கட்டுமானங்களை மேற்கொள்ளும்போது மக்களின் நலன்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவதும் அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு அத்தியாவசியமானதுமான திட்டங்களை முன்னெடுப்பதை உறுதிசெய்யவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** குழப்பம் நீங்கி, மனத்தெளிவு பிறக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் பன்மடங்கு உயரும். வாகனப் பயணத்தால், இனிய அனுபவம் காண்பீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.


**இடபம்:** உங்களின் நற்செயலைச் சிலர் குறை கூறலாம். தொழில், வியாபாரத்தில், பணிச் சுமை அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது நல்லது.


**மிதுனம்:** சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், கடின உழைப்புத் தேவைப்படும். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு அமைதிக்கு வழிவகுக்கும்.


**கடகம்:** மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாக இருக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை சேர்க்கும்.


**சிங்கம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி மறையும். இலாபம் சீராகும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.


**கன்னி:** தாமதமான பணிகூட தற்போது நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். ஆதாய வரவு அதிகரிக்கும். உறவினர் இல்ல சுபவிடயத்தில் பங்கேற்பீர்கள்.


**துலாம்:** எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் செலவு அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உடல்நலனில் கவனம் தேவை.


**விருச்சிகம்:** நேர்மையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சிறக்கும். இலாபம் உயரும். பணியாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.


**தனுசு:** இனிய பேச்சால் பிறர் மனத்தை கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை படைப்பீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். சுபவிடயத்தில், நல்ல முடிவு உண்டாகும்.


**மகரம்:** மனம் வருந்தும் வகையில் சிலர் செயற்படலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர். அலைச்சலைத் தவிர்ப்பது உடல்நலனைப் பாதுகாக்கும்.


**கும்பம்:** செயலில் மந்தநிலை பிரதிபலிக்கும். தொழிலில், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பை பயன்படுத்துவது அவசியம். வருமானம் சுமாராக இருக்கும். வாகனப் பாதுகாப்பில் கவனம் தேவை.


**மீனம்:** நற்செயல்களில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.



# அஜித்தின் அடுத்த ஜோடி யார்?

அஜித், சிவா கூட்டணியில் சத்யஜோதி பிலிம்ஸ் டி.ஜி.தியாகராஜன் தயாரிக்கும் அஜித்தின் 57 ஆவது படத்தின் படப்பிடிப்பு எதிர்வரும் ஜூலை மாதம் தொடங்கும் என்று கூறப்படுகிறது. 'வீரம்', 'வேதாளம்' ஆகிய வெற்றிப் படங்களைத் தொடர்ந்து அஜித்தும், சிவாவும் மூன்றாவது முறையாக இணையும் இந்தப் படத்தின் கதாநாயகிக்கான தெரிவுப் பட்டியலில் அஜித்துடன் 'என்னை அறிந்தால்' படத்தில் நடித்த அனுஷ்கா, 'வீரம்' படத்தில் இணைந்து நடித்த தமன்னா ஆகியோருடன் புதிதாக எமி ஜாக்சனும் இணைந்துள்ளார். இவர்களில் யார் அஜித்துக்கு ஜோடியாவார் என்பது விரைவில் தெரிந்து விடும். இந்த நிலையில் இந்தப் படத்தில் ஹீரோயின் தவிர்த்து மற்றொரு முக்கிய பாத்திரமும் உண்டாம்! இந்தப் பாத்திரத்தில் 'இறுதிச்சுற்று' நாயகியான ரித்திகா சிங்கை நடிக்க வைப்பதற்கான பேச்சும் ஒரு பக்கம் நடந்து வருகிறது என்ற தகவலும் வெளியாகியுள்ளது. ஆனால் இந்தப் படம் குறித்த எந்த அதிகாரபூர்வ அறிவிப்பையும் இதுவரை தயாரிப்புத் தரப்பினர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருவர் - நீண்ட நாள் உயிரோட வாழ என்ன வழி?
மற்றவர் - வேறென்ன... சாகாமல் இருப்பது தான்

ஒருவர் - தேநீர் கோப்பையை வாய்கிட்ட வச்சிக்கிட்டு அவர் என்ன பேசிக்கிட்டு இருக்கிறார்?
மற்றவர் - ஆவியோட பேசுறாராம்

ஒருவர் - காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுறாங்க?
மற்றவர் - அவங்க மெய் மறந்து காதலிக்கிறவங்களாச்சே!



ஒருவர் - நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் என்று நினைத்தேன்
மற்றவர் - செய்வது தானே...
முதலாமவர் - கை எச்சிலாகி விடுமே....


## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | 8 | | |
| 6 | | | | 4 | | | | 2 |
| 4 | | | 3 | 1 | | | | |
| 2 | | | 1 | | | | | |
| 5 | 3 | | | | 9 | 6 | | |
| 1 | | | | 8 | | 2 | 9 | |
| 9 | | 3 | 8 | | 6 | 5 | | |
| 8 | | 2 | | | | | | |
| 7 | 6 | | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 3 | 9 | 1 | 7 | 6 | 8 | 4 |
| 4 | 1 | 6 | 3 | 8 | 5 | 7 | 9 | 2 |
| 9 | 8 | 7 | 6 | 2 | 4 | 1 | 3 | 5 |
| 1 | 2 | 5 | 7 | 9 | 6 | 3 | 4 | 8 |
| 6 | 3 | 9 | 1 | 4 | 8 | 5 | 2 | 7 |
| 8 | 7 | 4 | 2 | 5 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 6 | 2 | 4 | 7 | 1 | 8 | 5 | 9 |
| 5 | 4 | 1 | 8 | 6 | 9 | 2 | 7 | 3 |
| 7 | 9 | 8 | 5 | 3 | 2 | 4 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


புரட்டாதி மாதத்தில்தான் இப்படி குடும்பப் போட்டோ எடுக்க முடியும்.

நாஸா விஞ்ஞானிக்கே சவால் விடக் கூடிய யோசனை


இனிமே அறிவு கெட்ட நாயே என்று எவரையும் திட்டாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ராட்சசி @Raatchasi · Apr 25
தாயோ காதலியோ, மனைவியோ, மகளோ என ஏதோ ஒரு பெண்ணின் அரவணைப்புக்குத் தான் அத்தனை ஆண்களும் அடிமையாய் இருக்கின்றனர்.



## நேற்றைய கடலுணவு

### விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 700 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 500 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 700 | – | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 500 | 600 | 300 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 450 | 300 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 500 | 300 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 400 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 600 | – | 320 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | – | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | 400 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | – | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 200 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 | 120 | – | 40 | 70 |
| கத்தரி | 140 | 80 | 80 | 100 | 100 | 140 | 70 | 80 |
| கரட் | 120 | 120 | 80–200 | 100 | 160 | 140 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 120 | 80 | 140 | 170 | 100 | 90 | 100 |
| பாகல் | 140 | 120 | 130 | 140 | 160 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 140 | 100 | 160 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 | 40 | 15 | 35 |
| தக்காளி | 100 | 140 | 140 | 180 | 160 | 240 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 200 | 200 | 200 | 300 | 300 | 60 | 200 |
| புடோல் | 100 | 60 | 120 | 60 | 60–80 | 80 | 30 | 80 |
| கோவா | 140 | 120 | 100 | 120 | 120–140 | 160 | 90 | 100 |
| வெண்டி | 100 | 80 | 80 | 120 | 100–120 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 180 | 200 | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 100–160 | 120 | 160 | 250 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 20 | 50 | 40 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 100–120 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 600 | 350 | 300–400 | 250 | 350 | 350 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 15 | 15–20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 140 | – | 200 | 140 | 150–160 | 160 | – | 150 |
| இராசவள்ளி | 150 | 140 | 180 | 150 | 160–180 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 150 | 150 | 120–180 | 240 | 150 | 150 |

## கண்ணாடி கப்புகள்

கண்ணாடி ஐஸ் கிறீம் கப்புகள் அறிமுகமாகியுள்ளன. அலங்காரமான வேலைப்பாடுகளுடன் விதம்விதமான வடிவங்களில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. தேவையான எண்ணிக்கையில் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இவை ஒவ்வொன்றும் 90 ரூபா தொடக்கம் 120 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



### இது புதுசு

## வீட்டை அழகாக்க...

**அழகான பெயின்டிங்:**
எம்ப்ராய்டரி செய்த கர்ச்சிப் துணிகளை பிரேம் போட்டு சுவர் அலங்காரமாய் மாட்டலாம். அழகான பெயின்டிங் உள்ள கலண்டர்களை தூக்கிப் போடாமல் பிரேம் போட்டு ஹோலில் மாட்டலாம். செலவு அதிகம் ஏற்படாது. தரை அழுக்காகாமல் இருக்க வினைல் ஷீட்களை ஒட்டலாம். இதன் மூலம் குறைவான விலையில் நிறைவான அழகைப் பெறலாம்.

**சமையலறை அழகு:**
சமையலறை அலுமாரியில் எவர் சில்வர் டப்பாக்கள் அடுக்குவதைத் தவிர்த்து, பிளாஸ்டிக் டப்பாக்களை ஒரே நிறத்தில் சிறிதும் பெரிதுமாய் வாங்கி அடுக்கி வைக்கலாம். தற்போது இவை மொத்தமாக அனைத்து அளவிலும் கிடைக்கின்றன. இதில் தேவையான சாமான்களை நிரப்பி, அதில் பொருள்களின் பெயரை எழுதி ஒட்டி வையுங்கள். பார்ப்பதற்கு அழகாகவும் தெரியும். சமையலறையில் இருக்கும்போது கணவரையோ, குழந்தையையோ எடுத்துத் தரச் சொன்னால் கூட சிரமமின்றி எடுத்துத் தருவார்கள். கிரைண்டருக்குக் கீழே புஷ் கொடுத்து விட்டால் அதை மேசையின் கீழே இழுத்துத் தள்ளி விடலாம்.



**படுக்கையறை அழகு:**
படுக்கை அறையின் அழகைக் கெடுப்பது ஒழுங்காக வைக்கப்படாத தலையணை, போர்வைகள் தான். இன் பில்ட்காட் என்னும் மேற்புறம் திறந்தால் உள்ளே அதிக இடம் கொண்ட கட்டில்களை படுக்கை அறையில் போட்டு விட்டால் அதிகப்படியான தலையணைப் போர்வைகளை அதில் வைத்துக்கொள்ளலாம். இடத்தையும் அடைக்காது. வீட்டில் கூடுமான வரையில் தரையில் எந்தப் பொருளையும் வைக்காமல் இருந்தால் அதுவே தனி அழகு தான்.



## நாளை

**வைகாசி-07**
வெள்ளிக்கிழமை - 20.05.2016
திதி: சதுர்த்தசி பி.இ.01.14 வரை
நட்சத்திரம்: சுவாதி
பி.ப.05.07 வரை
ராகுகாலம்: 10.22-11.52 வரை
[illegible]: 05.52-07.22 வரை



## சோளமா கொழுக்கட்டை

**தேவையான பொருள்கள்**

சோளமா - 2 கப்
சர்க்கரை - 100 கிராம்
துருவிய தேங்காய் - 1 கப்
நெய் - 1 தேக்கரண்டி
ஏலக்காய்த் தூள் - சிறிது

**செய்முறை:**
இட்லிப் பானையில் சுத்தமான துணியில் சோளமாவைக் கொட்டி, ஆவியில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும். அடிகனமான பாத்திரத்தில் ஒரு கோப்பை தண்ணீரைச் சூடாக்கி, சர்க்கரை, பொடியாக நறுக்கிய தேங்காய், ஏலப்பொடி ஆகியவற்றைச் சேர்த்துக் கொதிக்க விட்டு இறக்கிக் கொள்ளவும். மாவில் இந்தத் தண்ணீரை ஊற்றிக் கிளறி நன்றாகப் பிசைந்து கொள்ளவும். இந்த மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, எண்ணெய் தடவின இட்லி தட்டில் வைத்து ஆவியில் வேக வைக்கவும். எளிய முறையில் சோளமா கொழுக்கட்டை தயாராகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனை முகவர்களுக்கு டி.எஸ்.ஐ சொகுசு சுற்றுலா



டி.எஸ்.ஐ. டயர் நிறுவனம், 2015 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக முன்னெடுத்திருந்த சுப்பர் டீலர் - 2015 வர்த்தக ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களுக்கு சிங்கப்பூரைச் சுற்றிப் பார்ப்பதற்கும், ஸ்டார் க்ரூஸ் சொகுசு கப்பலில் பயணிப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.
மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்ற டி.எஸ்.ஐ. டயர் நிறுவனம், 2015ஆம் ஆண்டில் சிறந்த விற்பனைப் பிரதிநிதிகளை இலக்கு வைத்து, சுப்பர் டீலர் - 2015 என்ற பெயரில் சிறப்பு ஊக்குவிப்புத் திட்டமொன்றை செயற்படுத்தியிருந்தது. டி.எஸ்.ஐ டயர் உற்பத்திகளை உரிய நேரத்துக்கு வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற தமது விற்பனை முகவர்களை ஊக்குவிப்பதும் பாராட்டிக் கௌரவிப்பதுமே இதன் அடிப்படை நோக்கமாகும்.
சுப்பர் டீலர் 2015 வர்த்தக ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி சுற்றுலாவில் பங்கு கொண்டவர்களுக்கு சிங்கப்பூரிலிருந்து மலாக்கா நகரம்வரை ஸ்டார் க்ரூஸ் கப்பலில் சென்று மீண்டும் சிங்கப்பூருக்கு திரும்புவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. முதற்தடவையாக இலங்கைக்கு வெளியேசொகுசுகப்பலொன்றில் வெளிநாட்டு நடனக் கலைஞர்களின் பங்கேற்புடன் விருது வழங்கும் விழாவொன்று நடத்தப்பட்டமை மற்றுமொரு சிறப்பு அம்சமாகும். அதன்போது 120க்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்தச் சுற்றுலாவில் சம்சன் இறப்பர் கைத்தொழில் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரணதுங்க ராஜபக்ச உள்ளிட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் கலந்து சிறப்பித்தனர்.
கடந்த ஆண்டில் டி.எஸ்.ஐ. டயர் நிறுவனம், றிவோட்ஸ் பிளஸ் 2014 என்ற பெயரில் பிரம்மாண்டமான போட்டியொன்றை நடத்தி, 150க்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களுக்கு நான்கு நாள் மலேசிய சுற்றுலா பயண வாய்ப்பை வழங்கியது. 75 நாடுகளுக்கு மேல் டி.எஸ்.ஐ டயர்களை ஏற்றுமதி செய்யும் டி.எஸ்.ஐ டயரின் வெற்றிப் பயணத்தின் பெருமை மிக்க பங்குதாரர்களாக உள்ள விற்பனை முகவர்களை எதிர்காலத்திலும் உச்ச அளவில் பாராட்டிக் கௌரவிப்பதற்கு சம்சன் இறப்பர் கைத்தொழில் நிறுவனம் எதிர் பார்க்கின்றது. (த)

# லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மீது சிங்கப்பூர் ஹொஸ்பிட்டல் நாட்டம்



லங்கா ஹொஸ்பிட்டல்ஸ்கோப்பரேஷன் லிமிட்டெட்டின் பெருமளவான பங்குகளைக்கொள்வனவு செய்வதில் சிங்கப்பூர் ஹொஸ்பிட்டல்ஸ் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. அரசின் உரிமையாண்மையின் கீழ் இயங்கி வரும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் உரிமையாண்மையைத் தனியார் துறைக்கு வழங்க அரசு தீர்மானிக்கும் பட்சத்தில், அதன் மீது முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளதாக சிங்கப்பூர்ஹொஸ்பிட்டல்ஸ்தொடர் அறிவித்துள்ளது.
இந்தக் கொடுக்கல், வாங்கல் தொடர்பாடல் பேரம்பேசலை, முன்னணி அரசியல் பிரமுகர் ஒருவர் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலதிக உரையாடல்களுக்காக சிங்கப்பூரின் அதிகாரிகள் அடுத்தமாதம் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.
உள்நாட்டு நிறுவனங்களான ஹேமாஸ் மற்றும் சொஃப்ட் லொஜிக் போன்றனவும் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. ஆசிரி ஹொஸ்பிட்டல் குழுமத்தின் உரிமையாண்மையைக் கொண்டுள்ள சொப்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ், இந்த வாய்ப்பு மிகவும் அரிதானது எனத் தெரிவித்துள்ளது. ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் குழுமத்தின் உரிமையாண்மையைக் கொண்டுள்ள ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பங்குகளை அரசு விற்பனை செய்யத் தீர்மானித்தால் அவற்றைக் கொள்வனவு செய்வதில் தாம் ஆர்வமாக உள்ளதாக அறிவித்திருந்தது. இலங்கை அரசின் மறைமுக கட்டுப்பாட்டினுள் இயங்கும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் 54.61 பங்குகள் சிறிலங்கா [illegible] குறிப்பிடத்தக்கது. (த)

வணிகம்

## நுட்பம்

### புகைப்பட தேடலிலும் கூகுளின் விளம்பரங்கள்



இணையத்தள விளம்பர சேவையில் முன்னணியில் திகழும், கூகுள் நிறுவனம், தற்போது, கூகுளின் புகைப்பட தேடலிலும் விளம்பர சேவையை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.
கூகுள் தேடல் தளமே இன்று அதிக அளவானவர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் தேடு பொறியாக காணப்படுகின்றது. இதனை இலக்காக வைத்தே மேற்கண்ட சேவையை அறிமுகம் செய்ய கூகுள் நிறுவனம் எண்ணியுள்ளது.
இந்த விளம்பரங்கள் டெக்ஸ்டாப் கணினி மற்றும் கைப்பேசியின் திரைகளின் மேல் பகுதியில் மட்டும் காண்பிக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
தற்போது கூகுள் நிறுவனம் விளம்பர சேவையின் ஊடாகத் தான் இலாபமடைவது மட்டுமன்றி தனது பயனர்களும் இலாபமடையக் கூடிய வசதியை அளித்து வருகின்றது.

## தேர்தல் முடிவுகளை...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியே இன்ன கட்சிதான் வெற்றிபெறும் என்று சரியாகக் கணித்துவிட்டாலும், வெற்றி பெறும் தொகுதிகளின் எண்ணிக்கையைத் துல்லியமாகச் சொல்லிவிட முடிவதில்லை. தவிர உலகின் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, பல்வேறு மொழிகள், கலாசாரங்கள், பிரிவுகள் கொண்ட இந்தியாவில் வாக்காளர் மனதில் இருப்பதைத் துல்லியமாகத் தெரிந்து கொள்வது அத்தனை எளிதல்ல.
தவிர, குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் சார்புடைய ஊடகங்கள், நிறுவனங்கள் களநிலவரத்தைத் தெரிந்துகொண்டாலும், அதற்கு மாறான தகவல்களைக் கருத்துக் கணிப்பு என்ற பெயரில் வெளியிடுவதும் நடக்கத்தான் செய்கிறது. இதன் மூலம் ஜெயிக்கிற கட்சிக்கே ஓட்டு போடுவோமே எனும் எண்ணம் வாக்காளர்களிடம் விதைக்கப்படுவதாக விமர்சனங்களும் எழுகின்றன. கருத்துக் கணிப்பல்ல, கருத்துத் திணிப்பு என்று சிலர் எரிச்சலுடன் குறிப்பிட இந்தப் போக்கு காரணமாகிவிடுகிறது.
இவற்றையெல்லாம் தாண்டி ஓரளவுக்குச் சரியான முடிவுகளைத் தெரிவிக்கும் கருத்து, வாக்குக் கணிப்புக்களும் உண்டு. 2014 இல் இடம்பெற்ற மக்களைவத் தேர்தலின் வாக்குக் கணிப்பில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 340 தொகுதிகளையும், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 70 தொகுதிகளையும் கைப்பற்றும் என்று நியூஸ்24-டுடேஸ் சாணக்கியாவின் வாக்குக் கணிப்பு தெரிவித்தது. அந்தத் தேர்தலில் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 336 இடங்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு 60 இடங்களும் கிடைத்தன. ஆனால், தமிழகத்தில் அ.தி.மு.க. 37 தொகுதிகளைக் கைப்பற்றும் என்று எந்தக் கருத்துக் கணிப்பும், வாக்குக் கணிப்பும் சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2006 இல் இடம்பெற்ற தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு 157 முதல் 167 வரையிலான தொகுதிகளில் வெற்றி கிடைக்கும் என்று சி.என்.என்.-ஐ.பி.என்.-தி இந்து நடத்திய வாக்குக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு 163 இடங்கள் கிடைத்தன. இதோ இந்தத் தேர்தலில் சி-வோட்டரைத் தவிர இந்தியா டுடே ஆக்சிஸ், நியூஸ் நேஷன், ஏ.பி.பி., சாணக்யா, என்.டி.டிவி என்று ஐந்து நிறு வனங்களின் வாக்குக் கணிப்புகள் தி.மு.கவுக்குச் சாதகமாகத் தேர்தல் முடிவு இருக்கும் என்று சொல்லியிருக்கின்றன. பார்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனுக்குள்

தம்மைப் பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று அடையாளப்படுத்தினர். இதனால் மேலும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அனுமதியின்றி அத்துமீறி நுழைந்து, பணியாளர்கள் மத்தியில் அச்சத்தை விளைவித்தனர் என்று அவர்கள் மீது யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உதயன் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் பணியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமான பின்னர், சந்தேகத்துகிடமான இருவர் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்களை வீடியோ எடுத்தனர்.

இதனை அவதானித்த பணியாளர்கள், வீடியோ எடுத்தவர்களிடம் யார் என்று வினவினர். இருவரும் தாங்கள் பொலிஸார் என்று தெரிவித்தனர். அதில் ஒருவர் தான் தமிழர் என்று குறிப்பிட்டார். இருவரும் பொலிஸாருக்கான அடையாள அட்டை வைத்திருந்தனர். எனினும் என்ன காரணத்துக்காக உள்ளே வந்தீர்கள்? ஏன் வீடியோ எடுத்தீர்கள்? இவ்வாறு செய்யச் சொல்லி உங்களுக்கு யார் உத்தரவிட்டது என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கவில்லை.

இதன் பின்னர் அவர்களது கைபேசிகள் உதயன் பணியாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் உடனடியாகவே யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது. இதன் பின்னர், யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி உதயன் பணிமனைக்கு நேரடியாக வந்து, அவர்களை அழைத்துச் சென்றார். அத்துடன் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளையும் மேற்கொண்டார்.

சிவில் உடையில் வந்த இரு பொலிஸாரும், வாசலில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் உள்ளே நிகழ்வு இடம்பெறுகின்றதா? என்று வினவியுள்ளனர். அதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர், சற்றுப் பொறுங்கள் உள்ளே சென்று பொறுப்பானவர்களை அழைத்து வருகின்றேன் என்று தெரிவித்துள்ளார். பாதுகாப்பு உத்தியோகத்தர் உள்ளே நுழைந்த வேளையிலேயே, சிவில் உடையில் வந்த பொலிஸாரும் நினைவேந்தல் நடைபெறும் இடத்துக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## தமிழர்

க.வி.விக்னேஸ்வரன். வடக்கு மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் கிழக்கில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது வடக்கு முதலமைச்சர் தெரிவித்தாவது:-

மக்களின் கூட்டு ஏக்கத்தைப் பிரதிபலிக்கும் வண்ணமாகவே நாங்கள் இன்று இங்கு கூடியுள்ளோம். ஒருங்கு சேர்ந்து சோகத்தை வெளிப்படுத்துவது என்பது எமது பாரம்பரியப் பழக்கமாகும். அது சமூக கலாசாரப் பின்னணி கொண்டது.ஆனால் எமது சோகத்தைக் கூட்டாக வெளிக் காட்டுவதைக் கூட அண்மைக் காலம் வரையில் தடை செய்திருந்தார்கள்.

அழுவதென்பது மனதின் சுமையைக் குறைக்கும் ஒரு கைங்கரியம். அதற்குத் தடை செய்தவர்கள் மனிதப் பண்பை இழந்தவர்கள். இன்று பலத்த கெடுபிடிகள் அடங்கிவிட்டன. நாமும் சேர்ந்து தேர்ந்தெடுத்த அரசு இந்த விடயத்திலாவது எமது மனோ நிலையைப் புரிந்து நடப்பது எமக்கு மனதுக்கு இதமாக இருக்கின்றது. எனினும் போர்க்குற்ற விசாரணை சம்பந்தமாக மந்தகதியே அவதானிக்கப்படுகின்றது - என்றார். (த-வ-5)


## மரண அறிவித்தல்கள்

### பாலரட்ணம் இராஜமோகன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வசிப்பிடமாகவும் தாவடி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாலரட்ணம் இராஜமோகன் 17.05.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலரட்ணம் - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் இந்துஜா(பிரான்ஸ்). றொசாந். தனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோகுலரூபனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் நேகா. நிகில் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

RDS Lane
தாவடிவடக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 205 3079 / 077 404 8725

### சவரிமுத்து புஸ்பசீலன்



ஓடக்கரையைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் நோர்வேயில் வசித்து வந்தவரு மான சவரிமுத்து புஸ்பசீலன் 11.05.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - புனிதசீலி தம்பதியினரின் அன்பு மகனும் மேரிசெலஸ்ரீனாவின் பாசமிகு கணவரும் றொகான். றொகானா. சாள்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பசீலி, புஸ்பராஜன், புஸ்பநந்தன், புஸ்பநந்தினி ஆகியோ ரின் சகோதரனும் ஜோர்ஜ். யூடி. சாமினி. அமலன் ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை(20.05.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு நோர்வேயில் நடை பெறும். அதனையொட்டி நாவாந்துறையிலுள்ள அவரது இல்லத்தில் பி.ப 3.30 மணியளவில் இரங்கல் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவில் ஒழுங்கை,
நாவாந்துறை.

தகவல்:
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சீவரெட்ணம் இராமசந்திரன்

பிறப்பு
05 . 12 . 1952



இறப்பு
18 . 06 . 2016

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வதிவிடமாகவும் கொண்ட சீ.இராமசந்திரன் நேற்று (18.06.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரெட்ணம் மற்றும் நாகம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், தயாளினியின் அன்புக் கணவரும். காலஞ்சென்றர்களான கிருஸ்ணசாமி - நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலதாஸ் மற்றும் நேமிநாதன். கமலநாதன். கமலேஸ்வரி. கமலேஸ்வரன். கமலேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும். தனபாலாசுந்தரி. லிங்கமூர்த்தி. விநாயகமூர்த்தி. சத்தியமூர்த்தி. கிருஸ்ணவேணி. கல்யாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (12, ஆஸ்பத்திரி வீதி. கொட்டடி. யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12,ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி

(ஜெ.1403) (13.17) 077 617 5075

### திருமதி செல்லம்மா பாலசுப்பிரமணியம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பாலசுப்பிரமணியம் (15.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லையா- இலட்சுமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா- சின்னம் மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் செல்வபூபதி, செல்வரத்தினம். செல்வராணி. செல்வநாயகி காலஞ்சென்ற செல்வசோதி ஆகியோரின் அன்பு சகோதரியும் ஜெயக்குமார். ஜெயக் குமாரி. ஜெயந்தி. பாலஜெயா. பாலகுமார். பாலதாஸ் ஆகியோரின் அன்பு தாயாரும் இராஜ சுலோஜனா. லோகநாதன். கணேசன். சாந்தலிங்கம். வசந்தமேரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

30/3, நீக்கிலை லேன்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(68232) (12.18)

தகவல்:
ஜெயக்குமாரி
(ஜெயா)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகாலெட்சுமி(சின்னன்) அருமைரத்தினம்

தோற்றம்
12 . 05 . 1948



மறைவு
14 . 05 . 2016

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலெட்சுமி அருமைரத்தினம் 14.05.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் அருமைரத்தினம் அவர்க ளின் அன்பு மனைவியும் லதா(இலங்கை). தனுஷா(கனடா). சுரேஸ்(லண்டன்). ரோகினி(பிரான்ஸ்). தர்சினி(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான ரத்தினம். தங்கம்மா. லெட்சுமி. குமாரவேலு. நவரத்தினம் மற்றும் சரஸ்வதி(பிரான்ஸ்). சபாரத்தினம்(இலங்கை) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் தேவதாஸ்(இலங்கை). லிங்கேஸ்வரன் (கனடா). விதுசினி(லண்டன்). ரஞ்சன்(பிரான்ஸ்). பிரதீபன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பரஞ்சோதி காலஞ்சென்ற ரத்தினசிங்கம் மற்றும் குணசிங்கம்(கனடா). தனலெட்சுமி(இலங்கை). தங்கமணி(இலங்கை). மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் துளசி. கஜானன். சரனியா. அஸ்வின். அஸ்மிதா. கிருசன். தினேசன். திலோசனா. அனீசா. சஜீன். சஜீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை கச்சேரியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மாயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

35, கச்சேரிலேன்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### இளையவி வீரசிங்கம்



கோண்டாவில் தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் வீரபத்திரர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி வீரசிங்கம் 17.05.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - சீதேவி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பாலன் -முத்தி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாதம் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்) மற்றும் மஞ்சுளா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சண்முகநாதன் (பாஸ்கரன் - ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனும் , சஜித்தின் (ஜேர்மனி) அன்புப் பேரனும். பூமணி. காலஞ்சென்ற அப்பையா மற்றும் துரைராசா, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் உடன் பிறப்பும். காலஞ்சென்றவர்களான நாகம்மா. திரேசம்மா மற்றும் அரசம்மா, காலஞ்சென்ற அருணகிரிநாதர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்:
மஞ்சுளா - ஜேர்மனி

021 320 6357, 0049 1521 4012 172


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மயூரா அன்பளிப்பு நிலைய
உரிமையாளர் சுதர்சனின்
அன்புத் தாயார்

**திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கபிலா காலணியகம், கபிலா பாதணியகம், சிற்றி சூ பலஸ்**

## கண்ணீர் அஞ்சலி



எமது செயலாளர் **இ. பகீரதன்** அவர்களின்
அன்பு மாமியார்

**திருமதி
பரமேஸ்வரி அமரேசன்**

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.**

(J/1422)
(10.17)

## கண்ணீர் அஞ்சலி



மயூரா அன்பளிப்பு நிலைய
உரிமையாளர் சுதர்சனின்
பாசமிகு தாயாரும், ரதி பான்ஸி
ஹவுஸ் உரிமையாளர்
கிசோனின் மாமியாரும் ஆகிய

**திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அபி ஸ்தாபனத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கலட்சுமி கந்தையா



நல்லூர் சட்டநாதர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு சந்திர சேகரப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி கந்தையா (17.05.2016) செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தியாகராஜா-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராஜா கந்தையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தங்கமணி, சபாரத்தினம் மற்றும் தங்கராசா, இராஜேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களாகிய பொன்னுத்துரை, ஆறுமுகம், சுப்பிரமணியம், தங்கராசா மற்றும் மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனியும் தவமணி, வசந்தராணி, இந்திராணி, கலாநிதி, சிவகுமார், சிவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகரட்ணம், சண்முகராஜா, பொன்னையா காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் சுகந்தனி, ஆனந்தகுமார் ஆகியோரின் மாமியாரும் தனுசியா-மகேந்திரன், மஞ்சுளா - சதீசன், பிறேமலதா - சரவணப்பிரியன், கோபிதன், உஷாந்தன் - திஜானா, சுபாகரன், பாமினி, பார்த்திபன், அரவிந்தன், பிரதீபன், விஜிதா - விபூஷன், மதுஷன், தனுஷன், ரம்மியா, ஜனனி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மயூரிகா, விதுசிகன், ருதிஸ்கா, கீராசெல்லம்மா, அரவின்சண், அகிலேஷ், அகிலாஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 19.05.2016 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**12/5, சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

தகவல்;
**குடும்பத்தினர்.**
**021 300 7206**

## 06 ஆம் மாத நினைவுகளுடன்...

மலர்வு
23
01
1948



உதிர்வு
19
11
2015

05ஆம் வட்டாரம், வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட

**திருமதி கனகரத்தினம் இரஞ்சிதமலர்**

*நடமாடித் திரிந்த தெய்வம் – படமாகி
மாதங்கள் ஆறாகிப் போனதம்மா
உங்கள் நினைவுகளிலிருந்து
மீளமுடியாமல் தவிக்கின்றோம் – அம்மா
ஆறுதலை யார் தருவார் – எங்கள்
இடிந்து போன இதயங்களுக்கு*

தகவல் : மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

## கண்ணீர் அஞ்சலி



மயூரா அன்பளிப்பு நிறுவனத்தின் உரிமையாளரும், யாழ். வணிகர் கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்த எமது நண்பன்

**திரு. சுந்தரலிங்கம் சுதர்சனின் அன்புத் தாயார்**

**திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். வணிகர் கழக நண்பர்கள்.
யாழ்ப்பாணம்.**

(J/1422)
(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோகமயமானது

மக்கள், உணர்வு மேலீட்டினால் - ஒப்பாரி வைத்து அழுதனர். தாய்மார் கண்ணீர் விட்டுக் கதறி அழுதமை, முள்ளிவாய்க்கால் மண்ணையே சோகமய மாக்கியது. காண்போருக்கும் கண்ணீர் வரும் வகையில், அந்தத் தாய்மார் அழுதனர்.

இதன் பின்னர் நினைவேந்தல் உரைகள் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா தெரிவிக்கையில், போரின் பின்னர் எஞ்சியிருக்கும் மக்கள் சுதந்திரமான விடுதலையை அனுபவித்தாலே, உயிரிழந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடையும். அந்த விடுதலைக்காகப் போராடும் உறுதிமொழியை நாம் எடுக்கவேண்டும். இந்த நிகழ்வில் அதனைச் செய்யவேண்டும்.

இந்த இடத்தில் பொதுவான நினைவுத் தூபி அமைக்கப்படவேண்டும். அதனை முதலமைச்சர் மேற்கொள்ளவேண்டும். அத்துடன் இந்த விடயங்களை மேற்கொள்வதற்கான அறக் கட்டளை உருவாக்கப்பட்டு, அதனூடாக முன்னெடுக்கப்படவேண்டும். இது எல்லோருக்கும் பொதுவானதாக அமைதல் வேண்டும் - என்றார்.

புளொட் தலைவர் த.சித்தார்த்தன் உரையாற்றுகையில், இறந்த மக்களுடைய அரசியல் அபிலாசைகள் - அரசியல் விருப்பு இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மக்களுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. இதற்கான உந்துதலாக இந்த நினைவு தினங்கள் நடத்தப்பட வேண்டும் - என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் க.சுரேஷ் பிரேமசந்திரன், இந்த அரசும் தமிழ் மக்களுக்கு தீர்வைத் தரவில்லை. இதற்கான அழுத்தம் கொடுக்கப்படவேண்டும். அதற்காக இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

ரெலோ அமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், தமிழகம் உள்ளிட்ட பல நாடுகளில் இந்த நிகழ்வை ஒரே நாளில் நினைவுகூர்வதன் மூலம், தமிழ் மக்களின் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்க முடியும் - என்றார்.

இறுதியில் முதலமைச்சர் உரை நிகழ்த்தினார். இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள், தாயகத்தின் பலபகுதிகளிலும் பெருமளவான மக்கள் பங்கெடுப்புடன் இடம்பெற்றது. அத்துடன் புலம்பெயர் தேசங்களிலும் நடைபெற்றது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நேற்றைய தினம் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

(த-வ-5-ரி7)

## வித்தியா

அத்துடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் மன்றில் முன்லை யாகியிருந்தனர்.

இதன்போது குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி சந்தேகநபர்களினதும் மரபணுப் பரி சோதனை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்தார். குறித்த 9 சந்தேக நபர்களினதும் மாணவி வித்தியாவின் உடலிலிருந்து எடுக்கப்பட்டிருந்த சில திரவ மாதிரிகளும் மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவை இரண்டும் தொடர்புடையதாக உள்ளனவா என்பது பற்றி அறிவதற்காக மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்தநிலையில் அந்த ஆய்வின் முடிவு அறிக்கை நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் என்ன விடயம் கூறப்பட்டுள்ளது என்பது பற்றித் திறந்த நீதிமன்றில் நேற்றுக் கூறப்படவில்லை.

ஆனால் இரத்தக் கறைகளுடன் கூடியதாகச் சந்தேக நபர்கள் சிலரிடமிருந்து மீட்கப்பட்டிருந்த ஏனைய உடைகள் பற்றிய அறிக்கைகள் உள்ளிட்ட ஏனைய அறிக்கைகள் நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவை பற்றி தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் சந்தேக நபர்களின் மரபணுப் பரிசோதனை அறிக்கை கிடைக்கவில்லை என்று கூறி நீதிமன்றம் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருந்ததோடு, அதனை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறும் கடந்த தவணைகளில் நீதிவான் கட்டளையிட்டிருந்தார்.

இந்தநிலையில், வித்தியா படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையில், நேற்று மரபணுப் பரி சோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப் பிக்கப் பட்டுள்ளது. (த-வ-4)

## போர்

பிணைப்பிலேயே உருவாக முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாடாளுமன்ற மைதானத்தில் நேற்று மாலை, படையினருக்கான அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதி தெரிவித்ததாவது:-

ஒரு அரசின் ஸ்திரத் தன்மையில் இராணுவப் பங்களிப்பு முக்கியமானது. இதனை ஐ.நா. உள்ளிட்ட சர்வ தேச அமைப்புக்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

எமது நாட்டில் போர் முடிந்த பின்னர் செய்யப்பட வேண்டிய விடயங்கள் கடந்த காலங்களில் செய்யப்படவில்லை. அதற்குப் பின்னர் செய்ய வேண்டிய விடயங்களை இப்போது எமது அரசு செய்யத் தொடங்கியிருக்கின்றது.

நாட்டில் மீண்டும் போர் ஏற்படாத வகையில், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். போர் நடைபெற்ற நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பு வது என்பது கடினமான பணி. அதனை எமது அரசு செய்கின்றது. துப்பாக்கி வேட்டுக்கள் மௌனித்த பின்னர் சமாதான முழக்கத்தை ஏற்படுத்துவது சவால் மிக்கதாகும். சர்வ தேச ஒத்துழைப்புடன் நாம் இதனைச் செய்து கொண்டிருக் கின்றோம்.

எமது நாட்டில் 20 ஆம் நூற்றாண்டிலிருந்தே இன முரண்பாடு இருந்து வருகின்றது. நாம் நிலையான நல்லிணக்கத்தைத் தேடிய பயணத்திலேயே இருக்கின்றோம். அவ்வாறு நிலையான நல்லிணக்கம் ஏற்பட்ட பின்னர்தான், நாம் ஆத்ம திருப்தியடைய முடியும்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர், எமது அரசு இராணுவத்தை வேட்டையாடுவதாக சுவரொட்டி ஒட்டினார்கள். ஆனால் அவர்களது ஆட்சிக் காலத்தில், போரை வெற்றி கொண்ட இராணுவத் தளபதியை பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்திச் சிறைச்சாலைக்குள் அனுப்பி, சிறை உடையில் அழகு பார்த்தார்கள்.

எந்த எதிர்ப்புக்கள் வந்தாலும், எமது அரசு மீது, எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், நல்லிணக்கத்தை நோக்கிய எமது பயணம் தொடரும் - என்றார். (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### கணபதி சண்முகம்



உரும்பிராய் மேற்கு, மூன்று கோயிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி சண்முகம் 18.05.2016 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - இலக்ஷ்மி தம்பதியரின் புதல்வரும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலகுமாரி, விஜயா, சிவபாலன்(கனடா), வளர்மதி, அருள்மதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரத்தினம், செல்வரஞ்சன், சந்திரகுமாரி, குமணகுமார், சிவேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சரஸ்வதி, செல்லத்துரை மற்றும் மார்க்கண்டு, கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரரும் குபேரன், கிருஷாளினி, கபிந்தன், சஞ்சீவன், சாரங்கன், சாரங்கி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.05.2016) மு.ப 10 மணிக்கு நடைபெற்று உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**உரும்பிராய் மேற்கு,**
**மூன்று கோயிலடி.**

தகவல்:
**குடும்பத்தினர்**



### திருமதி திலகவதி வீரசிங்கம்

நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப் பிடமாகவும் அராலி மத்தி வட்டுக்கோட் டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி வீரசிங்கம் நேற்று (18.05.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயசிறியின் (ஆசிரியை, யா/அராலி வள்ளியம்மை வித்தியாலயம்) அன்புத் தாயாரும், சேயோனின் (லக்சுமி எலற்ரோணிக்கல், லக்சுமி ரவல்ஸ், மானிப்பாய்) அன்பு மாமியும், அபிநயா (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), அபிஷன் (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி, வட்டுக்கோட்டை.**
**077 711 1192**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரமேஸ்வரி அமரேசன்

கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அமரேசன் நேற்று (18.05.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் அமரேசனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், செங்குந்தா இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி அன்னப்பா தம்பதியரின் பாசமுள்ள மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஶ்ரீஸ்கந்தா (பசுமை) ஶ்ரீஸ்ராம் (சிங்கப்பூர்) ஶ்ரீ சிவகாமி (மாகாண உள்ளகக் கணக்காய்வு அலகு, வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்சினிதேவி, சுஜாத்தா (பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு வடக்கு மாகாணம்) பகீரதன் (செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமியும், பரமசிவம் (இந்தியா) ஶ்ரீதரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், சரவணபவன் (கொழும்பு) விருத்தாசலம் (கனடா) மாணிக்கவல்லி (இந்தியா) இந்திரா (கொழும்பு) விஜயலட்சுமி (கொழும்பு) காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் மைத்துனியும் பானுசன், வேதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி வடக்கு.** (J/1420) (10.17)

தகவல்: **குடும்பத்தினர்.**
**071 8584 888**

**அன்னை மடியில்**
**07 . 07 . 1946**



**ஆண்டவன் அடியில்**
**17 . 05 . 2016**

### இராஜலிங்கம் இராஜசேகரம்

யாழ். ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜலிங்கம் இராஜ சேகரம் 17.05.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜலிங்கம் அரியமணி (ஊரெழு கிழக்கு) தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சின் னம்மா (கோப்பாய் தெற்கு) தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவமனோகரி (மனோ) அவர்களின் அன்புக் கணவரும், சுஜீவா, ரஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரம், விஜயசேகரம், இராஜலட்சுமி, இராஜேஸ்வரி, தர்மசேகரம், இராஜமலர், ஞானசேகரம், தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மதுரா அவர்களின் அன்பு மாமனாரும், லோகேஸ்வரி, இந்திரா, கணேசலிங்கம், கேசவன், புஷ்பா, விக்கினராஜா, வாசுகி, லட்சுமிகாந்தன், ஜெகதீஸ்வரி, நவரட்ணராஜா, குணரட்ணராஜா, யோகரட்ணராஜா, புஷ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பரமேஸ்வரன், மல்லிகா, வனஜா, விஜி, சற்குரு ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**பழைய வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**மைத்துனி -வதனா 0777048273**
**மைத்துனன்-யோகு 077 6701203**
**மகள்-சுஜீவா (கனடா)**
**+14163996215** (J/1429) (10.17)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கொட்டித்தீர்த்தார் கோக்லி பஞ்சாய் பறந்தது பஞ்சாப்

## நிஜ மழைக்குள் நிகழ்ந்த சிக்சர் மழை





ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பெங்களூர், பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 82 ஓட்டங்களால் பெங்களூர் அணி வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மழை கொட்டித் தீர்த்ததனால் ஆட்டம் நீண்ட நேரம் தாமதமாகவே ஆரம்பமானது. இதனால் ஆட்டம் 15 பந்துப்பரிமாற்றங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பெங்களூரின் ஆரம்ப வீரர்களாக கோக்லியும், கெயிலும். இருவரும் சில பந்துப்பரிமாற்றங்கள் தாக்குப்பிடித்தால் சிக்சர் மழை பொழியப்படும் என்பது உலகறிந்த விடயம். ஆனால் அத்தகைய ஓர் ஆட்டம் எப்போதிலிருந்து ஆரம்பமாகும் என்பது தான் புரியாத புதிராக இருந்தது. முதல் மூன்று பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 17 ஓட்டங்களையே பெங்களூர் எடுத்திருந்தது. அப்பொட் வீசிய நான்காவது பந்துப்பரிமாற்றத்தில் இரு சிக்சர்களையும், ஓர் பவுண்டரியையும் அடித்து அதிரடிக்கு பச்சைக் கொடி காட்டினார் கெயில். ஐந்தாவது பந்துப்பரிமாற்றத்திலிருந்து ரண் மெசினின் வேட்டை ஆரம்பமானது. ஓர், இரு ஓட்டங்களை ஓடியெடுப்பதென்பது அரிதிலும் அரிதாக இருந்தது. சிக்சர்களும் பவுண்டரிகளுமே அதிகம் இடம்பிடித்தன. 8.5. பந்துப்பரிமாற்றங்களில் இலக்கெதனையும் இழக்காமல் 100 ஓட்டங்களை எட்டியது பெங்களூர். இதே நிலையில் தொடர்ந்தால் 200 ஓட்டங்களைப் பெற்றுவிடலாம். கெயிலின் அரைச்சதம் 26 பந்துகளிலும், கோக்லியின் அரைச்சதம் 28 பந்துகளிலும் பதிவாகின. அணியின் ஓட்ட எண்ணிக்கை 147 ஆக இருந்தபோது 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கெயில். அதே பந்துப்பரிமாற்றத்தில் வில்லியர்ஸையும் வீழ்த்தினார் அப்பொட். எந்தவிதமான இலாபமும் இல்லை. ஏனெனில் மறுமுனையில் கோக்லியின் மிரட்டல் தொடர்ந்து கொண்டிருந்தது. சண்டீப் சர்மா, மொகிற் சர்மா, அப்பொட், கரியப்பா, அக்சர் பட்டேல் என்று எவரையும் விட்டுவைக்கவில்லை. ஓர் பந்துப்பரிமாற்றத்தில் குறைந்தது இரு சிக்சர்கள் அல்லது மூன்று பவுண்டரிகள் பதிவாகிக் கொண்டிருந்தன. 47 பந்துகளை எதிர்கொண்டு நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் தனது நான்காவது சதத்தைப் பதிவுசெய்தார் கோக்லி. இலகுவில் தொட்டுவிட முடியாத இமாலயச் சாதனை இது. மட்டுமல்லாமல் நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் கோக்லியின் தனி நபர் ஓட்ட எண்ணிக்கை 800 ஐத் தாண்டிவிட்டது. 113 ஓட்டங்களுடன் கோக்லி ஆட்டமிழந்தாலும் கிடைத்த வாய்ப்புக்களை லோகேஸ் ராகுல் சரியாகப் பயன்படுத்த முடிவில் பெங்களூர் 211-3.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பாக சண்டீப் சர்மா, அப்பொட், அக்சர் பட்டேல் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப்புக்கு முத லிரு பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே அந்த அணியின் தலைவர் முரளி விஜய்யால் நம்பிக்கை கொடுக்க முடிந்தது. 8 பந்துகளில் 16 ஓட்டங்களைப் பெற்று அரவிந்தின் பந்தில் போல்ட் ஆனார். 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. சாஹலின் பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகளைப் பதிவுசெய்து நான்காவது பந்தில் வீழ்ந்தார் சஹா. பவுண்டரிகளுக்கும் பஞ்சம் இல்லாமல் அதே நேரத்தில் சீரான இடைவெளியில் இலக்குச் சரிவுகளுடன் நகர்ந்தது பஞ்சாப்பின் இன்னிங்ஸ். 9 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் பஞ்சாப் 84-7. இறுதி 6 பந்துப்பரிமாற்றங்களில் 128 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலை. பெங்களூருக்கு வெற்றி. ஆட்டநாயகனாக கோக்லி. இந்த முடிவுகள் முன்கூட்டியே தெரிந்திருந்தும் நகர்ந்துகொண்டிருந்தது ஆட்டம். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் பஞ்சாப்பின் வெற்றிக்கு 92 ஓட்டங்கள் தேவை என்றிருந்த போது



மழை குறுக்கிட டக்வேர்த் லூயிஸ் முறைப்படி பெங்களூருக்கு 82 ஓட்டங்களால் வெற்றி வழங்கப்பட்டது.

பந்துவீச்சில் பெங்களூரின் சார்பாக சாஹல் 4 இலக்குகளையும், வற்சன், அரவிந் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

## ஆடுகளத்தில் அதிருப்தி

ஐ.பி.எல். தொடரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரிடம் தோல்வியடைந்தது கொல்கத்தா அணி. இந்தத் தோல்விக்காக ஆடுகளத்தின் மீது அதிருப்தி தெரிவித்துள்ளார் கொல்கத்தாவின் சகிப் அல் ஹசன்.

குறித்த விடயம் தொடர்பாக சகிப் அல் ஹசன் மேலும் தெரிவிக்கையில் – இந்தத் தோல்வி எங்களுக்குப்பின்னடைவுதான். ஆடுகளம் எங்களுக்கு சாதகமாக இல்லை. நாங்கள் சுழற்பந்து வீச்சை அதிகமாக சார்ந்து இருக்கிறோம். அதனால் எப்போதும் உள்ளூர் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஓரளவு ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் ஆடுகளம் இது வரை அவ்வாறு தயார்ப்படுத்தப்படாமை ஏமாற்றம் அளிக்கிறது. விராட் கோக்லியின் பிடியெடுப்பை கம்பீர் தவற விட்டதை திருப்பு முனையாக நினைக்கவில்லை. கோக்லி ஆட்டம் இழந்திருந்தால் இன்னொரு வீரர் ஓட்டங்களைக் குவித்திருக்கலாம் – என்றார். (ம)



## மலையகத்தில்

காணாமற்போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இராணுவப் பேச்சாளர் ஜயநாத் ஜயவீர நேற்றுத் தெரிவித்தார்.

இயற்கையின் கோரத்தாண்டவத்தால் மலைநாட்டின் சில பகுதிகள் சுடுகாடுகளாக மாறிவருகின்றன. புலத்கோப்பிட்டிய களுப்பான தோட்டத்தில் 10 வீடுகளைக் கொண்ட லயன் குடியிருப்பில் பக்கத்திலிருந்த மலை நேற்றுச் சரிந்ததால் 16 பேர் மண்ணுக்குள் புதையுண்டனர்.

மேலும், நேற்றுமுன்தினம் மாவனல்ல, அரநாயக்க எல்பிட்டிய மலை சரிந்து விழுந்ததில் அரநாயக்க பிரதேசத்தில் உள்ள ஸ்ரீபுர, எலகபிடிய, பல்லேபாகே ஆகிய மூன்று கிராமங்கள் மண்ணுக்குள் புதையுண்டன.

இதில் 150 இற்கும் அதிகமானவர்கள் காணாமற்போனார்கள். இதில் இரு இடர்களிலும் மாயமானவர்களில் நேற்று மாலை வரை 24 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.ஏனையோரைத் தேடும் பணிகள் இடம்பெறுவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

புலத்கோப்பிட்டிய, களுப்பானத் தோட்டத்தில் 10 வீடுகளைக் கொண்ட லயன் தொகுதியொன்று நேற்றுக் காலை 5 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவால் புதையுண்டது. லயன் குடியிருப்புக்குப் பக்கத்தில் உள்ள மலை சரிந்து விழுந்ததாலேயே இந்த இடர் ஏற்பட்டது என்று இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

10 குடியிருப்புகளில் வசித்த 16 பேர் இதன்போது மண்ணுக்குள் புதையுண்டனர். நேற்று மாலை இதில் 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன என்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ மற்றும் பொலிஸ் படை தெரிவித்தது. சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை இந்த மலை சரிந்து சென்றதாலேயே லயன் குடியிருப்பிலிருந்த 16 பேரும் புதையுண்டனர்.

6 ஆண்களும், [illegible] பெண்களும் ஒன்பது மாதக் குழந்தையொன்றும் இதன்போது மண்ணுக்குள் புதையுண்டனர். இந்த இடரில் 6 வீடுகள் மண்ணுக்குள் முற்றாகப் புதையுண்டதுடன் 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில், இந்த லயன் குடியிருப்புக்கு அருகில் இருக்கும் 28 குடும்பங்களைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், ஏனைய இடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் போதிய இட வசதி அங்கு இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த மக்களுக்கு இங்கு மண்சரிவு அபாயம் இருப்பதாக இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவுறுத்தியிருந்து. ஆனால், இந்த மக்கள் அதிலிருந்தது வெளியேறி வேறு இடங்களில் தங்கும் வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்காததன் காரணமாக அவர்கள் அந்த லயன் குடியிருப்பிலேயே வசித்து வந்துள்ளனர்.

இந்த மண்சரிவில் 68 ஆண்களும், 57 பெண்களும் என 125 பேர் காணாமற்போயுள்ளதாக அவர்களின் குடும்ப உறவுகளின் தகவல்கள் மூலம் அறிய முடிவதாக அரநாயக்க பிரதேச செயலாளரான ஏ.எம்.பைஷால் கூறுகின்றார்.

இதன்போது 66 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும், ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களினால் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையத்தினால் இறுதியாக வெளியிடப்பட்ட தகவல்களின்படி 83 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 3 இலட்சத்து 52 ஆயிரம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்களில் 49 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 24 ஆயிரம் பேர் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி 375 நலன்புரி நிலையங்கள் உட்பட பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சியாளராக ராவிட் கவாஸ்கர் வலியுறுத்தல்

இந்திய அணியின் பயிற்சியாளராக ராவிட் நியமிக்கப்பட வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் வீரரான கவாஸ்கர் வலியுறுத்தியுள்ளார்.
இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை புதிய பயிற்சியாளர் ஒருவரை நியமிக்க முனைப்புக் காட்டி வருகிறது. முன்னாள் வீரர்கள் பலரதும் தெரிவாக ராவிட் உள்ளார். இந்த நிலையில் கவாஸ்கரும் ராவிட்டை ஆதரித்துள்ளார்.
குறித்த விடயம் தொடர்பாக கவாஸ்கர் தெரிவிக்கையில் - ராவிட் ஓர் கிரிக்கெட் மேதை. இந்திய அணியின் தூண் என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு நுட்பங்களைக் கரைத்துக் குடித்தவர் அவர். தற்போதைய இந்திய அணியை வழி நடத்தக்கூடிய திறமை ராவிட்டுக்கு அளவுக்கு அதிகமாக உள்ளது என்றே கருகிறேன். - என்றார். (ம)





## இலங்கை - இங்கிலாந்து ஆட்டம் இன்று ஆரம்பம்


இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் லீட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.
மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும், 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும், ஒரு ரி-20 ஆட்டத்திலும் பங்கேற்பதற்காக இலங்கை அணி இந்த மாதம் 7ஆம் திகதியே இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டது. டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு முன்னதாக இலங்கை அணி இங்கிலாந்துக்குச் சென்றதனால் அங்குள்ள தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப வீரர்கள் தம்மைத் தயார்படுத்தியிருப்பார்கள். மட்டுமல்லாமல் ஆடுகளத்தின் தன்மையையும் அறிந்து வைத்திருப்பார்கள். இவை இலங்கை அணிக்கு சாதகமான விடயங்களாகச் சொல்லப்படுகின்றன.
இலங்கைக்கும் இங்கிலாந்தின் கழகங்களுக்கும் இடையில் நடைபெற்ற இரு பயிற்சி ஆட்டங்களை வைத்துப்பார்க்கின்ற பொழுது முதலாவது ஆட்டத்தில் குசல் மெண்டிஸ், டிக்வெல்ல இருவரும் அரைச் சதத்தைப் பதிவுசெய்திருந்தனர். இரண்டாவது ஆட்டத்தில் சானக, கருணாரத்ன இருவரும் சதத்தை விளாசியிருந்தனர். மட்டுமல்லாமல் குசல் மெண்டிஸ், கேரத் இருவரும் அரைச்சதத்தைப் பதிவுசெய்திருந்தனர். தவிர திரிமன்னே, சந்திமல், மத்தியூஸ் மூவரும் 30 முதல் 40 வரை யிலான ஓட்டங்களை எடுத்திருந்தனர். இதன்மூலம் இலங்கையின் துடுப்பாட்டம் மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்ப எத்த னிக்கிறது என்பது தெளிவாகிறது.
இலங்கையின் பலவீனம் என்று பார்க்கின்ற பொழுது, முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பிரசாத் காயமடைந்து நாளை ஆரம்பமாகும் ஆட்டத்திலிருந்து விலகியுள்ளமை இலங்கைக்கு நிச்சயம் நெருக்கடியை ஏற்படுத்தவல்லது. எல்லா வற்றுக்கும் மேலாக, இலங்கையுடன் பயிற்சியாட்டத்தில் மோதிய கழகத்தில் ரோன் பிரீட் என்ற 16 வயதுப் பாடசாலைச் சிறுவன் இருந்தான். இவன் நான்கு இலக்குகளை வீழ்த்தியிருந்தான். 17 வயதுடைய பாடசாலை வீரர்கள் மேலும் இருவர் விளையாடியிருந்தனர். எனவே இந்த அணிக்கு எதிரான அடைவுமட்டத்தை வைத்து இலங்கை துடுப்பாட்டத்திலும் நல்ல நிலையில் உள்ளது என்று முடிவெடுத்துவிட முடியாது. எது எப்படியோ ஆட்டம் இன்று ஆரம்பம். பொறுத்திருந்து பார்ப்போம் இலங்கைச் சிங்கங்கள் கர்ச்சிக்கின்றனவா அல்லது கதறக்கதற வாங்குகின்றனவா என்பதை. (ம)

## மல்லாகம் சிறிபாஸ்கரன் மைதானம் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கு 30 வருட குத்தகைக்கு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 19
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஆட்டங்கள், பயிற்சிகள் மற்றும் கிரிக்கெட் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அச்சங்கத்துக்கு மல்லாகம் சிறிபாஸ்கரன் மைதானம் ஒப்பந்தமிடப்பட்டுள்ளது.
திருமதி பாலாம்பிகை சிறிபாஸ்கரன் தலைமையிலான மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கம் தனது உடைமையிலான இந்த மைதானத்தை சுமார் முப்பது வருட காலத்துக்கு கட்டணம் ஏதுமின்றி யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்துக்கு மனமுவந்து கையளித்துள்ளது.
இது தொடர்பிலான சட்டப் பதிவுகள் மற்றும் நடவடிக்கைகளை க.தர்மகுலசிங்கத்தைத் தலைவராகக் கொண்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் மேற்படி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து முன்னெடுத்துள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 19
**இமையாணன் மத்தியின் தொடர்**
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.
**கழுகுகள் வி.க.தொடர்**
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று வியாழக்



கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் முல்லைத்தீவு இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
**கே.ஸி. ஸி.ஸி. வி.க. தொடர்**
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட் டங்கள் கொக்குவில் இந் துக்கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத் தில் பற்றிசியன்ஸ் அணியைஎதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-108-23)

## பொம்மர்ஸ், ரெட் றேஞ்சர்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன

யாழ்ப்பாணம், மே 19
யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் பொம்மர்ஸ், ரெட் றேஞ்சர்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.
இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ரெட்றேஞ்சர்ஸ் அணி மோதியது. இரு அணிகளாலும் கோல்களைப் பதிவுசெய்ய முடியாது போக சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. இதில் ரெட் றேஞ்சர்ஸ் அணி 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து களியம்பாள் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் பொம்மர்ஸ் அணியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. அந்த அணியின் சாரங்கன் 24ஆவது, 27 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் பொம்மர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 56 ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸின் புஸ்பகுமா ரும், 66 ஆவது நிமிடத்தில் சாரங்கனும் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் பொம்மர்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## மாகாண மட்ட பூப்பந்தாட்டம்

கரணவாய், மே 19
வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடர்கள் இன்று வியாழக்கிழமை மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன. இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடர் நாளையும் நாளை மறுதினமும் என தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும். (ம-422-108)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ரம் என்றாலே சும்மா அதிருதில்ல

இந்திய அணியின் ரண்மெசின் என்று வர்ணிக்கப்படும் கோக்லி, தான் அக்ரம் பந்துவீச்சை எதிர்கொள்ளாவிடினும் அவரது கடந்த கால வேகத்தைப் பார்த்து அச்சப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் உலகின் நிகழ்கால ஜாம்பவான் என்றால் அது கோக்லியாகத்தான் இருக்க முடியும். களமிறங்கும் ஆட்டங்களில் அரைச்சதம், சதம் என்று விளாசி வருகிறார். சச்சினின் சாதனைகள் கோக்லியால் தவிடுபொடியாக்கப்படும் என்ற எண்ணம் தற்பொழுது படிப்படியாக வர ஆரம்பித்துள்ளன. இந்த நிலையிலேயே அக்ரம் தொடர்பான தனது மனப்பதிவைக் கோக்லி பகிர்ந்துள்ளார்.

அக்ரம் தொடர்பாக கோக்லி தெரிவிக்கையில் – நிகழ்கால கிரிக்கெட்டில் நான் எனக்கு சவாலான வீரர் என்று எவரையும் கருதவில்லை. எவரது பந்துவீச்சையும் கண்டு பயப்படவும் இல்லை. உலகில் உள்ள அத்தனை பந்துவீச்சாளர்களையும் எதிர்கொள்ளவே விரும்புகிறேன். ஆனால் பாகிஸ்தானின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரான அக்ரமின் பந்து வீச்சின் மட்டில் எனக்கு ஒரு பயம் உள்ளது. அவரது பந்துப்பரிமாற்றத்தை நான் எதிர்கொள்ளவில்லையானாலும் வீடியோ வடிவில் பார்த்ததில் அவர் நிச்சயம் எனக்கு சவால் தருவார் என்று எண்ணுகின்றேன் – என்றார். (ம)





# செரினா வில்லியம்ஸ் தொடர்ந்தும் முதலிடம்

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் தனது புதிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன்படி செரினா வில்லியம்ஸ் வழக்கம்போல முதலிடத்தைப் பிடித்துள்ளார். ஊக்கமருந்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் தடைவிதிக்கப்பட்ட செரபோவா படிப்படியாக தனது தரப்படுத்தலை இழந்து தற்போது பத்தாவது இடத்துக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

புதிய தரப்படுத்தலின் படி 9 ஆயிரத்து 30 புள்ளிகளுடன் செரினா முதலிடத்தில் உள்ளார். 5ஆயிரத்து 850 புள்ளிகளுடன் ரட்வன்ஸ்கா இரண்டாமிடத்தில் உள்ளார்.

இவர்கள் இருவருக்கும் இடையில் கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கும் அதிகமான புள்ளிகள் இடைவெளி காணப்படுகின்றன. இதனால் அடுத்த நான்கு மாதங்களில் செரினா எந்தவித தொடர்களிலும் கலந்துகொள்ளாமல் விட்டு அந்தத் தொடர்களை ரட்வன்ஸ்கா கைப்பற்றினாலும் செரினா பின்னுக்குத் தள்ளப்படமாட்டார். 5ஆயிரத்து 740 புள்ளிகளுடன் கெர்பர் மூன்றாமிடத்திலும், 5ஆயிரத்து 196 புள்ளிகளுடன் முருகுசா நான்காவது இடத்திலும், 4ஆயிரத்து 341 புள்ளிகளுடன் அசரென்கா ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறுமுதல் பத்து வரையான இடங்களில் முறையே கேலப், வின்சி, பென்சிச், ரிமா, பிளாவியா பென்னட்டா ஆகியோர் உள்ளனர். (ம)

# காயம் காரணமாக விலகினார் ரசல்

ஐ.பி.எல். தொடரில் குஜராத், கொல்கத்தா அணிகள் இன்று பலப்பரீட்சை செய்யவுள்ள நிலையில், காயம் காரணமாக இன்றைய ஆட்டத்திலிருந்து விலகியுள்ளார் கொல்கத்தாவின் ரசல்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. பஞ்சாப், புனே அணிகள் வெளியேறிவிட்டன. ஏனைய அணிகள் பிளே ஓப் சுற்றுக்கு முன்னேற வேண்டுமென்றால் இனிவரும் அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ரசல் காயம் காரணமாக இன்றைய ஆட்டதிலிருந்து விலகியுள்ளமை அந்த அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் ரசல் மூன்றாவது இடத்தில் உள்ளார். மட்டுமல்லாமல் அதிக ஓட்டங்களைக் குவித்த கொல்கத்தா வீரர்களின் பட்டியலிலும் மூன்றாவது இடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)



# கூடைப் பந்தாட்டம்

முல்லைத்தீவு, மே 19

உங்கள் நண்பன் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் முல்லைக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடர் ஒன்று மல்லாவி மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெற உள்ளது. இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குக் குறித்த திடலிலேயே நடைபெறும். (ம)

# ஐ.பி.எல்.இல் இல்லாதமையே பாகிஸ்தானின் பின்னடைவு



ஐ.பி.எல். தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடாதமையே குறைந்த பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டங்களில் அந்த அணியின் பின்னடைவுக்குக் காரணம் என பாகிஸ்தான் அணிக்குப் புதிய பயிற்சியாளராகப் பொறுப்பேற்ற மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் இணையதளம் ஒன்றில் அவர் இது பற்றி கூறியதாவது, ஐ.பி.எல். போன்ற தொடர்களில் ஆடுவதால் நிறையக் கற்றுக் கொள்ளலாம். இது ஒரு பெரிய பங்கு வகிக்கிறது. இதில் விளையாட முடியாமல் போனது பாகிஸ்தான் ரி–20 கிரிக்கெட்டைப் பாதித்துள்ளது. பாகிஸ்தான் வீரர்களுக்கும் ஐ.பி. எல். போன்ற தொடர்களில் தேவையான அளவுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும். தற்போதைய பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சு, சுழல் பந்துவீச்சு இரண்டுமே சிறப்பாக உள்ளது. பாகிஸ்தான் தொடர்ந்து நல்ல வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கி வருகிறது, தொடர்ந்து உருவாக்கவே செய்யும். அதே போல் சுழற்பந்திலும் சிறந்து விளங்குவதால் வரும் தொடர்களில் பாகிஸ்தான் பக்கம் சாதகம் உள்ளது – என்றார். (ம)

## வேலையாள் தேவை

பிரபல இடத்தில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு தொலைபேசி திருத்துனர் மற்றும் பெண் உத்தியோகத்தர் தேவை.

077 63 78 892 / 077 33 81 398

JJ1427X(10.17)

## விற்பனைக்கு உண்டு

58-xxxx
Super GL VAN
Year 1993
Model - 102
4 Door

0777 238615

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர், யுவதிகள், O/L,A/L எழுதியோர், தொழில்தேடுவோர் தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் உங்களால் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

சனி, ஞாயிறு பிரிவுகள்ஆரம்பம் 21.05.2016 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம்-24.05.2016
காலை 10.00-12.00

பாடப்புத்தகங்கள் சான்றிதழ்,Video DVD, அனைத்தும் இலவசம்.

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# பீஜிங் ஒலிம்பிக்கிலும் ஊக்கமருந்து; வெளிச்சத்துக்கு வரும் தில்லுமுல்லு

2008ஆம் ஆண்டு பீஜிங் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் பங்கேற்ற வீர, வீராங்கனைகளில் 454 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 31வீர,வீராங்கனைகள் ஊக்கமருந்தை எடுத்துக் கொண்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

12 நாடுகளைச் சேர்ந்த 6 வகையான விளையாட்டுகளில் கலந்துகொண்ட 31 வீர,வீராங்கனைகள் ஊக்கமருந்தை உபயோகப்படுத்தியுள்ளனர். இவ்வாறு ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாக இனங்காணப்பட்டவர்கள், இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் கலந்துகொள்ள முடியாது என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. எனினும் எந்த நாட்டு வீர,வீராங்கனைகள் அதிகளவில் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதென்றோ அல்லது வீர,வீராங்கனைகளின் பெயர் விவரங்களோ உறுதிபட வெளியாகவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.